வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 50/-




ஈழநாடு வார மலர்
Eelanadu
Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 173 பக்கங்கள் : 16

# வடக்கு வைத்தியசாலைகளுக்கு விசேட மேலதிக நிதி ஒதுக்கீடுகள்!

### யாழ்.வந்த சுகாதார அமைச்சர் உறுதிமொழி



யாழ்ப்பாணம், ஜூன். 28

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கான நிதி ஒதுக் கீட்டை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியத் தேவை கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை, சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஏற்றுக் கொண்டுள்ளார். ஏனைய மாகாண ங்களைப் போலன்றி, வடக்கில் மாவட்ட பொது மருத்துவமனை கள் மாகாண சபையின் கீழ் இயங்கு வதைக் கருத்தில் கொண்டு, நிதி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி விசேட மேலதிக நிதி ஒதுக்கீடுகள் பெற்றுத் தரப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

வடக்கு மாகாண சுகாதாரத்துறை மேம்பாடு தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக் கிழமை மாலை நடைபெற்றது. சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் கூட்டாகத்

15

## தெல்லிப்பழை வைத்தியசாலை நிலை; நேரில் ஆராய்ந்தார் சுகாதார அமைச்சர்



யாழ்ப்பாணம், ஜூன். 28

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மற்றும் புற்று நோய்ப் பிரிவு ஆகியவற்றை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என ஒரு தரப்பினர் கோரி வரும் நிலையில், யாழ்ப்பாணத்துக்கு நேற்று சனிக்கிழமை விஜயம் செய்த சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெல்லிப்பழை வைத்தியசாலையில் விசேட கலந்துரையாடலை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வைத்தியசாலையின் தற்போதைய தேவைகள், உட்கட்டமைப்பு வசதி கள், மருத்துவ உபகரணங்கள், மனிதவளத் தேவை கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள்

15

## சுரேஷ் சாலே விவகாரத்தை சிலர் அரசியலாக்கியுள்ளனர்!

### வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 28

சுரேஷ் சாலே தொடர்பான விவகாரத்தை தற்போது சில தரப்பினர் அரசியல் பிரச்னையாக மாற்றி அரசியல் சர்ச்சையாக முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாண யக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து

15

## சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனத்தை மீறியமைக்காக இலங்கை மீது நடவடிக்கை!

### 9 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன். 28

சித்திரவதைகள் மற்றும் ஏனைய மிக மோசமான, மனிதத் தன்மைய ற்ற, பாரதூரமான தண்டனைகளு க்கு எதிரான பிரகடனத்தை ஏற்றுக் கொண்ட உறுப்புநாடுகள், அப்பிர கடனத்தை மீறிச் செயற்பட்ட இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென 9 சர் வதேச மனித உரிமைகள் அமைப்பு க்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் அபி விருத்திக்கான ஆசியப் பேரவை, சர்வதேச நீதிக்கான அவுஸ்திரேலிய நிலையம், பாதுகாப்பு பொறுப்பு க்கான உலகளாவிய நிலையம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், நியூ லைன்ஸ் கற்கைகள் நிலை யம், இலங்கையில் சமத்து வம் மற்றும் விடுதலைக்கான

15

## யாழ். போதனா வைத்தியசாலையில் ரூ. 300 மில்லியன் செலவில் 'கத் லாப்'

### சுகாதார அமைச்சர் நேற்று திறந்து வைத்தார்



யாழ்ப்பாணம், ஜூன். 28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லைக்கு நேற்று சனிக்கிழமை விஜயம் செய்த சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுமார் 300 மில்லியன் ரூபாய் பெறுமதியான "கத் லாப்" ஆய்வுகூட பிரிவை திறந்து வைத் தார்.

15

## சுரேஷ் சாலேயுக்கு மாரடைப்பு!

### இருதய சிகிச்சைப் பிரிவில் அனுமதி

கொழும்பு, ஜூன். 28

அரச புலனாய்வுச் சேவையின் முன் னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே, கொழு ம்பு தேசிய வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்ப ட்டுள்ளார்.

அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு கார ணமாகவே அந்தப் பிரிவில் அனுமதிக்க ப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பி லான விசாரணைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு , விசாரணைக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் சுகவீ னம் என வைத்தியசாலையில் அனுமதி க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் நிலையிலேயே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இருதய

14

## சுரேஷ் சாலேயின் நிலை கவலைக்கிடம்!

### மனைவி மனோரி சாலே கூறுகிறார்

கொழும்பு, ஜூன். 28

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணி ப்பாளர் சுரேஷ் சாலேயின் உடல்நிலை கவலைக்கிட மாக இருப்பதாகவும், அவர் எந்த சூழ்நிலையிலும் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவ தில்லை எனவும் சுரேஷ் சலேயின் மனைவி மனோரி சாலே தெரிவித்துள்ளார்.

15

## அரசாங்கத்தைக் கண்டித்து வடக்கு மீனவர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன். 28

புதிய அரசாங்கமும் புதிய அதன் அமைச்சரும் மீனவ ர்களின் பிரச்னைகளுக்கு எந்தவித தீர்வுகளையும் முன் வைக்காத நிலையில் தேசிய ரீதியில் மாபெரும் போராட் டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு வடக்கு மீனவர்கள் தீர் மானித்துள்ளனர்.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் அதன் உப தலைவர் அன்ரனி ஆல்பர்ட் தலைமையில் நேற்று காலை 10:30 மணிளவில்

14

## பல அரச நிறுவனங்கள் நிதி ஆபத்து மட்டத்தில்!

கொழும்பு, ஜூன். 28

அரச நிறுவனங்களின் நிதி ஆபத்து பகுப்பாய்வின்படி, பல அரச நிறுவனங்கள் இன்னமும் அதிக நிதி ஆபத்து மட்டத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, லங்கா சத்தொச, மில்கோ நிறுவனம், சீனிக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியன இந்த அதிக நிதி ஆபத்து மட்டத்தில் இருப்பதாக வெளிப்படுத்தப்பட்டுள் ளது.

14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 5 பேர் கைது!

கிளிநொச்சி, ஜூன். 28

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட இரண்டு தனித்தனி சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில், ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து போதைப்பொருள், திருடப்பட்ட பெறுமதிமிக்க பொருள்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு மற்றும் புன்னைநீராவி பகுதிகளில் கிடைத்த இரகசிய தகவல்களின் அடிப்படையில், தர்மபுரம் பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

பிரமந்தனாறு பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இரண்டு பெறுமதிமிக்க கைப்பேசிகள், வெளிநாட்டு நாணயத்தாள்கள், இரண்டு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் சுமார் மூன்று கிராம் "ஐஸ்" போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, புன்னைநீராவி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நான்கு இளைஞர்களை சிறப்பு அதிரடிப்படையினர் சோதனைக்குட்படுத்தியபோது, அவர்களிடமிருந்து 4 கிராம் 520 மில்லிகிராம் கெரோயின் கைப்பற்றப்பட்டது.

இதையடுத்து, குறித்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திசாநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# யுவதிக்கு பாலியல் தொந்தரவு; யாழில் இராணுவ கப்டன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன். 28

யாழ்ப்பாணத்தில் ஓடும் பஸ்ஸுக்குள் யுவதியொருவருடன் அங்க சேட்டை புரிந்த குற்றச்சாட்டில், இராணுவ கப்டன் தர அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகர் பகுதியில் இருந்து பலாலி வீதியூடாக பலாலி நோக்கிச் சென்ற பஸ்ஸில், பயணித்த யுவதியுடன் ஒருவர் அங்க சேட்டை புரிந்து, பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட யுவதி, யாழ்ப்பாண பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக தகவல் வழங்கியதை அடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் ஆரியகுளம் பகுதியில் வைத்து பஸ்ஸை மறித்து குறித்த நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நபர் பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் 09ஆவது காலாட்படை பிரிவை சேர்ந்த கப்டன் தர அதிகாரி என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சட்டவிரோத கடற்தொழில் 8 கடற்தொழிலாளர் கைது!

## படகு, வலைகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜூன். 28

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 08 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து படகு மற்றும் வலைகள் கைப்பற்றப்பட்டன.

கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோத கடற்தொழிலில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் நேற்று முன் தினம் கடற்படையினர் கடலிலும், தரையிலிலும் சிறப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது கடலில், ஒளி பாய்ச்சி மீன் பிடித்தமை, சட்டவிரோத வலைகளை பாவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் ஒரு படகில் தொழிலில் ஈடுபட்ட 06 பேரையும் கைது செய்ததுடன் அவர்களின் படகு, மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றையும் கைப்பற்றினர்.

அதேவேளை, கரையில் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை கைது செய்ததுடன், அவர்களிடம் இருந்து வலைகளையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட 08 கடற்தொழிலாளர்களையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகு, வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# இலங்கையில் 50 பேரில் ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமை!

## அமைச்சர் சரோஜா சாவித்திரி



கொழும்பு, ஜூன். 28

இலங்கையில் 50 பேரில் ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு, புனர்வாழ்வு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "முழு நாடும் ஒன்றாக" தேசிய போதைப்பொருள் ஒழிப்பு பேரணியில் கலந்துகொண்டதன் பின்னர் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை போதைப்பொருளுக்கு இரையாவதன் காரணமாக இந்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள தாய்மார்களும் பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வி சீர்குலைந்து அவர்களின் வாழ்க்கையே இருண்டு போகிறது.

இந்த மாபெரும் பேரழிவிலிருந்து நாட்டை மீட்பதற்கு பாரிய கூட்டு முயற்சி தேவை. இதற்கிடையில், போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் மூலம் அரசியல் பின்னணிகளுக்கும் போதைப்பொருள் குற்றங்களுக்கும் இடையே உள்ள தொடர்புகள் வெளிப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை விடுவிப்பதற்காக கோடிக்கணக்கில் இலஞ்சம் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில், சந்தேகநபர்களை ஆயுதங்களை காண்பிப்பதற்காக அழைத்துச் செல்வதாகக் கூறி நீண்ட காலம் தடுத்து வைத்து, பின்னர் அவர்களை விடுவிப்பதற்காக அரச இயந்திரங்கள் கூட பயன்படுத்தப்பட்டுள்ளன.

அன்று அத்தகையதொரு அரசியல் கலாசாரமே காணப்பட்டது. குற்றவியல் நாடொன்றை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தற்போது வெளிப்பட்டு வருகிறது. இந்த குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தச் செயற்பாட்டில் பின்னிற்கப்போவதில்லை- என்றார். (அ)

# வலி.வடக்கில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படக்கூடிய சாத்தியம்!



யாழ்ப்பாணம், ஜூன். 28

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் வடக்கு பலாலி பகுதிகளில் பாதுகாப்புப் படைகளின் பயன்பாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் காணிகள் தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் கூட்டம் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

காணி தொடர்பான விவகாரங்கள் குறித்த முன்னைய கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு), துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் எரிசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக்க, கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு ஆகியோர் இணைந்து தலைமை தாங்கினர்.

இதன்போது, காணி உரிமை தொடர்பான குறைகளைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை விரைவுபடுத்துதல், சமூக - பொருளாதார முன்னேற்றத்துக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் பிராந்திய நிர்வாக அமைப்புகளுடன் இணைந்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

இந்நடவடிக்கைகள் தேசிய நல்லிணக்க செயல்முறைக்கும் பிரதேச மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் முக்கியமானவை என வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தின் போது, எல்லை மறுசீரமைப்புகளை இறுதிப்படுத்துதல், இழப்பீடு வழங்கும் நடைமுறைகளை விரைவுபடுத்துதல் மற்றும் எதிர்காலத்தில் உரிய உரிமையாளர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டிய காணித் துண்டுகளுக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற முக்கிய விடயங்கள் குறித்தும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய பாதுகாப்பு பிரதி அமைச்சர், கடந்த மாதம் யாழ்ப்பாண பிரதேசத்தில் பல முக்கிய இடங்களுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது பெற்ற அனுபவங்களையும் அவதானிப்புகளையும் பகிர்ந்து கொண்டார்.

குறிப்பாக, பாதுகாப்புப் படைகளின் பயன்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பாக அவர் கவனம் செலுத்தியதாக தெரிவித்தார்.

இக்கூட்டத்தின்போது, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், நிலவும் சவால்களைப் பற்றி கலந்துரையாடி, அனைத்து நிறுவனங்களுக்கும் இடையிலான பயனுள்ள ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்திய வாறு செயற்பாடுகளை மேலும் விரைவுபடுத்துவதற்கான நடைமுறை நடவடிக்கைகளை அடையாளம் காணும் வாய்ப்பும் கிடைத்தது.

இதனுடன், உரிய காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு விடுவிக்கும் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புச் சபையின் இறுதி அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்படும் எனவும் இணக்கம் எட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் பாதுகாப்பு செயலாளர், இராணுவம் மற்றும் விமானப்படை தளபதிகள், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், இராணுவ மற்றும் விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டெங்கு நோயாளர் அதிகரிப்புக்கு புதிய வைரஸ் பரவலே காரணம்!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 28

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு புதிய டெங்கு வைரஸ் பரவலே காரணம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய வைரஸ் தாக்கத்துடன் நோய் பரவல் அதிகரித்திருந்தாலும், விசேட செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால் தற்போது அதன் தாக்கம் ஓரளவு குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக கொழும்பு மாவட்டம், மஹரகம மற்றும் கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் டெங்கு அச்சுறுத்தல் அதிகமாகக் காணப்படுவதாகவும், வீடுகளை விட பொது இடங்கள், பாடசாலைகள், அலுவலக வளாகங்கள் மற்றும் பாழடைந்த வெற்று நிலங்களிலேயே அதிகளவில் நுளம்புகள் பெருகும் சூழல் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பாதியில் கைவிடப்



பட்ட கட்டுமானப் பகுதிகளும் டெங்கு பரவலுக்கான முக்கிய இடங்களாக உள்ளதாக சுட்டிக் காட்டிய அவர், நாட்டின் பல பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கூறினார். (அ)

# பலத்த காற்று எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 28

கற்பிட்டியிலிருந்து மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையிலும் உள்ள கடல் பகுதிகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய, கற்பிட்டியிலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான மற்றும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்கரைக்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடுவதுடன், குறித்த கடற்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

இதனையடுத்து, கடற்றொழிலில் ஈடுபடுவோர் மற்றும் கடலுக்குச் செல்லும் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி செயலகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்


கொழும்பு, ஜூன். 28

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு இணையாக, ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான வேலைத்திட்டமொன்று நேற்று முற்பகல் நடைபெற்றது.

நாடு முழுவதும் டெங்கு நோய் வேகமாக பரவுவதைத் தடுப்பதற்காக, சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு அரச நிறுவனங்களின் மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்குவதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் இருந்து பேர வாவிப் பகுதி வரையிலும், சாரணர் வீதி ஊடாக அலரி மாளிகை வரை இந்த சிரமதான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோருடன் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இந்த வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)



# தியத்தலாவையில் பஸ் விபத்து: 42 பேர் காயம்!

கொழும்பு, ஜூன். 28

கொழும்பிலிருந்து , பதுளை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸொன்று, தியத்தலாவை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை வேளையிலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்து நடந்தவுடன் பிரதேச மக்களும், அதிகாரிகளும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்டவர்களை சிகிச்சைக்காக தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

விபத்து குறித்து பொலிஸார் தற்போது தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 16 வயது பாடசாலை மாணவர்கள் பயணித்த மோ.சைக்கிள் விபத்து!

## ஒருவர் உயிரிழப்பு! மற்றொருவர் படுகாயம்!!

கொழும்பு, ஜூன். 28

பிலியந்தலை, மகுளுதூவ பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தில் 11ஆம் தரத்தில் கல்வி பயிலும் 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொரு மாணவர் படுகாயமடைந்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் பிலியந்தலை, நிவந்திடிய பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முன்னால் சென்ற ஓட்டோ ஒன்றை முந்திச் செல்ல முயன்றபோதே, மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த தொலைபேசி கம்பத்தில் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தின் தாக்கத்தினால் மோட்டார் சைக்கிள் முன்பக்க சக்கரம் மற்றும் பல பாகங்கள் உடைந்து தனியாக கழன்று வீசப்பட்டுள்ளன.

உயிரிழந்த மாணவரிடம் ஓட்டுநர் உரிமம் இருந்திருக்கவில்லை என்பதுடன், பின்னால் பயணித்து படுகாயமடைந்த மாணவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் பின் இருக்கையில் அமர்ந்து பயணித்த மாணவர் கடுமையான காயங்களுடன் களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற மாணவர் பிலியந்தலை மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போதே உயிரிழந்திருந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் குறித்து பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 12 மில்லியனுக்கும் அதிகமானோர் 'ரின்' இலக்கங்கள் பெற்றுள்ளனர்!

## 5 மில்லியன் பேர் காத்திருப்பு என்கிறார் பிரதி அமைச்சர் நிஷாந்த

கொழும்பு, ஜூன். 28

இதுவரை 12 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வரி செலுத்துவோர் அடையாள எண்களை பெற்றுள்ளதாக் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர தெரிவித்துள்ளார்.

மேலும் சுமார் 5 மில்லியன் மக்கள் தங்களது வரி செலுத்துவோர் அடையாள எண்களை பெற்றுக்கொள்வதற்காகக் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த எண்களை தபால் மூலம் பயனாளர்களுக்கு அனுப்பாததால், பல தனிநபர்கள் தங்களது வரி செலுத்துவோர் அடையாள எண்களின் நிலை குறித்து அறியாமல் இருக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரி செலுத்துவோர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையதளத்துக்குச் சென்று, தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் தமது வரி செலுத்துவோர் அடையாள எண்களின் நிலையை சரிபார்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தெங்கு மற்றும் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியை 3 பில்லியன் டொலர் பொருளாதாரமாக மாற்ற இலக்கு!

## ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 28

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கையின் தெங்கு மற்றும் உணவுப் பொருள்கள் சார்ந்த ஏற்றுமதித் துறையை 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருளாதாரமாக மாற்றும் இலக்குடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், தெங்கு சார்ந்த ஏற்றுமதித் துறையை 2 பில்லியன் டொலர் பெறுமதியாகவும், உணவுப் பொருள்கள் சார்ந்த ஏற்றுமதித் துறையை 1 பில்லியன் டொலர் பெறுமதியாகவும் உயர்த்துவதற்கான திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

ஏற்றுமதியை பன்முகப்படுத்துவதற்கும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் தேவையான அரசாங்க ஆதரவுகள் வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொழில்துறையினரால் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால செயற்திட்டங்கள் உருவாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்புகள் வழங்கப்படும் என்றும், குறிப்பாக தெங்கு சார்ந்த உற்பத்தித் தொழில்களை நிறுவ அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வகையில், ஏற்றுமதி உற்பத்திகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் இறக்குமதியை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

உள்நாட்டு விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்தி, ஏற்றுமதி நோக்கிலான உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை அதிகாரிகள் மற்றும் தெங்கு, உணவுப் பொருள்கள் உற்பத்தித் துறையைச் சேர்ந்த முன்னணி தொழில்முனைவோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆயிரம் தொல்பொருள் இடங்களை பாதுகாக்க தேசிய வேலைத்திட்டம்!

## தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை



கொழும்பு, ஜூன். 28

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள ஆயிரம் தொல்பொருள் வரலாற்று இடங்களைப் பாதுகாப்பதற்கான விசேட தேசிய வேலைத்திட்டமொன்றைத் தொல்பொருள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் ஏழாம் திகதி உத்தியோகபூர்வமாகக் கொண்டாடப்படவுள்ள தேசிய தொல்பொருள் தினத்தை முன்னிட்டு, 'உருமயட ஜீவயக்' அதாவது 'பாரம்பரியத்திற்கு ஓர் உயிர்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பாதுகாப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சேனரத் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதற்கட்டச் செயல்பாடுகளின் கீழ், தெரிவுசெய்யப்பட்ட நூறு தொல்பொருள் மையங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மற்றும் முறையான பாதுகாப்பு உத்திகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்கும் பணிகளில் உள்ளூர் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இணையாக மற்றுமொரு விசேட வேலைத்திட்டமும் திணைக்கள மட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ளதாகப் பணிப்பாளர் நாயகம் சேனரத் விக்ரமசிங்க மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். (அ)

வங்கி மோசடிகளால் ரூ. 1 பில்லியன் இழப்பு:

# மத்திய வங்கி அதிகாரிகளிடம் பொது நிதிக்குழு விசாரணை!

கொழும்பு, ஜூன். 28

வங்கி முறையுடன் தொடர்புடைய மோசடிகள் காரணமாக இலங்கை சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான வெளிநாட்டு செலாவணியை இழந்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெளியிட்ட தகவலைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தின் பொது நிதிக்குழு அடுத்த வாரம் மத்திய வங்கி அதிகாரிகளிடம் விசாரணை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான சட்டங்கள் குறித்து விவாதிப்பதற்காக பொது நிதிக்குழு அடுத்த வாரம் கூடவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதியின் இந்த வெளிப்படுத்தல் குறித்து அடுத்த வாரம் இடம்பெறவுள்ள கூட்டத்தில் நிச்சயமாக விவாதிக்கப்படும் என அதன் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து "ஜனாதிபதியின் அறிக்கை மிகவும் தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் என்பதால் அடுத்த வாரம் கூட்டம் கூடும்போது இது குறித்து விவாதிக்கப்படும்," என அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும்,இந்த வார தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, சட்டவிரோத நிதிப் பரிவர்த்தனைகள் மூலம் நாட்டிலிருந்து சுமார் 300 பில்லியன் ரூபாய் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும், இதனால் சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு செலாவணி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்,போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானமும் இந்த சட்டவிரோத வெளிச்செல்லலில் அடங்குவதாகக் குறிப்பிட்ட அவர், பணமோசடி மற்றும் நிதிசார் குற்றங்களுக்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 50 ஆயிரத்தை கடந்தது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

கொழும்பு, ஜூன். 28

இந்த ஆண்டு இதுவரை நாட்டில் பதிவான டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சமூக வைத்தியர் பிரஷிலா சமரவீரா தெரிவிக்கையில், இதுவரை 50,459 டெங்கு நோயாளிகளும், 30 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

நுளம்புகளின் அடர்த்தி இன்னும் குறையாத நிலையில், டெங்கு பரவல் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்றார். குறிப்பாக நீண்ட வார இறுதி நாள்களில் பொதுமக்கள் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தமாக பராமரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக தகுதிவாய்ந்த வைத்தியரை அணுகி தேவையான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெங்கு உறுதிப்படுத்தப்படும் வரை பரசிட்டமோல் வகை மருந்துகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாடாளுமன்ற ஒம்புட்ஸ்மன் நியமனத்தில் தாமதம் ஏன்?

## அரசாங்கத்திடம் எதிர்க்கட்சி கேள்வி

கொழும்பு, ஜூன். 28

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த 'விசேட பாராளுமன்ற ஒம்புட்ஸ்மன்' பதவியை ஏன் இன்னும் உருவாக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல கேள்வி நேரத்திலேயே அவர் இந்த கேள்வியை முன்வைத்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகளைக் கையாளுவதற்காகவே இந்த பதவி உருவாக்கப்படவிருந்தது. ஆனால், தற்போதைய அரசாங்கம் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, சட்டமா அதிபரின் அதிகாரங்களுக்கும், ஒம்புட்ஸ்மனின் கடமைகளுக்கும் இடையில் உள்ள சட்ட ரீதியான தெளிவுபடுத்தல்கள் அவசியமென்றும், அது தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து, எக்ஸ் பிரஸ் பேர்ல் கப்பல் விவகாரம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா கேள்வி எழுப்பினார்.

அந்த வழக்கு ஏன் சிங்கப்பூருக்குக் கொண்டு செல்லப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

எனினும், பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளின்படி, முன்வைக்கப்பட்ட கேள்வியுடன் தொடர்பில்லாத விடயங்களை எழுப்ப முடியாது என நீதி அமைச்சர் அதற்குப் பதிலளிக்க மறுத்தார். இதன் காரணமாக பாராளுமன்றத்தில் வாதப் பிரதிவாதம் இடம் பெற்றது. (அ)

# சூரியசக்தி நிறுவனங்களுக்கான நிலுவை எப்போது வழங்கப்படும்?

கொழும்பு, ஜூன். 28

சூரியசக்தி நிறுவனங்களுக்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகையை அரசாங்கம் எப்போது செலுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய் மூலக்கேள்வி நேரத்திலேயே அவர் இந்த கேள்வியை முன்வைத்துள்ளார்.

சூரியசக்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சுமார் 459 நிறுவனங்களுக்கு கடந்த சில மாதங்களாக பணம் வழங்கப்படாமையால், அவை பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளன. இதனால் ஊழியர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளித்த வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க,

நிலுவைத் தொகைகளைச் செலுத்தத் தேவையான 15 பில்லியன் ரூபா நிதி திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அமைச்சரவையின் வழிகாட்டலின்படி, நிலுவையில் உள்ள அனைத்துக் கொடுப்பனவுகளையும் அடுத்த ஒரு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# நடிகர் பாக்கியராஜ் காலமானார்



சென்னை, ஜூன். 28

தமிழ்த் திரையுல கில் நடிகர், வசன எழுத்தாளர், திரைக் கதை அமைப்பா ளர், இயக்குநர், சிறப்பு வேடமேற்கும் நடிகர், தயாரிப் பாளர், எனப் பன்மு கம் கொண்ட கலை ஞர் கே.பாக்கிய ராஜ் மார டைப்பு காரணமாக நேற்று காலை காலமானார்.

73 வயதான அவருக்கு நேற்று காலை மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

திரைக்கதை எழுதுவதில் மன்னன் என பெயர் பெற்ற பாக் கியராஜ் பல வெற்றி படங்களை இயக்கி நடித்திருந்தார்.

இயக்குநர் இமயம் பாரதிரா ஜாவிடம் உதவி இயக்குநராக பணி புரிந்துள்ளார். 16 வயதி னிலே, கிழக்கே போகும் ரயில் உள்ளிட்ட படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றியிருந்தார்.

தனது குரு பாரதிராஜா காலமான 2 வாரத்திலேயே பாக்ய ராஜ் காலமான சம்பவம் தமிழ் திரையுலகில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதிக விலைக்கு கீரி சம்பா விற்பனை;

# தம்புள்ளையில் 2 கடைகளுக்கு தலா 2 இலட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு, ஜூன். 28

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு கீரி சம்பா அரிசியை விற்றதாக குற்றத்தை ஒப்புக்கொண்ட ஒரு மொத்த வியாபாரி மற்றும் ஒரு சில்லறை கடைக்கு, தம்புள்ளை நீதவான் நீதிமன்றம் மொத்தம் ரூ. 2 இலட்சம் அபராதம் விதித்துள்ளது.

தம்புள்ளையிலுள்ள இரண்டு வணிக நிறுவனங்களில் நடத்தப்பட்ட சோதனைகளைத்தொடர்ந்து, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் மாத்தளை மாவட்ட அலுவலகத்தால் இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

ஒரு வழக்கில், தம்புள்ளை பிரத்தியேக பொருளாதார மையத்தில் உள்ள ஒரு மொத்த வியாபார நிறுவனம் சம்பந்தப்பட்டது. அங்கு, ஒரு கிலோகிராம் ரூ. 255 என அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட கீரிச் சம்பா அரிசி, ஒரு கிலோகிராம் 261 ரூபாவுக்கு விற்கப்படுவதை புலனாய்வாளர்கள் கண்டறிந்தனர்.

இரண்டாவது வழக்கு, தம்புள்ளையிலுள்ள ஒரு சில்லறை கடை சம்பந்தப்பட்டது. அங்கு, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கீரிச் சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை ரூ. 255 ஆக இருந்தது. ஒரு கிலோகிராம் ரூ. 260 மதிப்புள்ள பொருள், ரூ. 360 என்ற விலையில் விற்கப்பட்டு வந்தது.

குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதை அடுத்து, நீதிமன்றம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ. 100,000 இலட்சம் அபராதம் விதித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.06.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், ஆனி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## வடமாகாண ஆளுநரின் நடவடிக்கை தோற்றுவித்திருக்கும் சர்ச்சை

வவுனியா மாநகரசபை முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபனையும் சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோரையும் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நான்கு நாட்களுக்கு முன்னர் வெளியிட்ட அரச வர்த்தமானி மூலம் தகுதிநீக்கம் செய்து பதவியில் இருந்து நீக்கிய செயல் ஒருவிதமான அரசியல் பதற்றத்தை தோற்றுவித்திருக்கிறது.

ஆளுநரின் நடவடிக்கையையும் அதன் விளைவாக தோன்றியிருக்கும் முரண்பாடுகளையும் இரு வேறுபட்ட கோணங்களில் நோக்க வேண்டும். ஒன்று நிருவாகப் பொறுப்புக்கூறல், மற்றையது ஜனநாயக ரீதியான அதிகாரப்பகிர்வு.

ஆளுநர் அலுவலகத்தினதும் மாகாண நிருவாகத்தினதும் பார்வையில் இந்த நீக்கங்கள் நிருவாக முறைகேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பொது நிதியைப் பாதுகாப்பதற்கும் அவசியமான ஒரு மேற்பார்வை நடவடிக்கையாக நோக்கப்படுகிறது.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி கந்தையா அரியநாயகத்தின் தனிநபர் விசாரணையைத் தொடர்ந்து மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் நகரசபைகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் விசேட அதிகாரங்களை ஆளுநர் பயன்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆளுநரின் தலையீட்டை ஆதரிப்பவர்கள் அவர் பொதுநலன் கருதியே செயற்பட்டிருக்கிறார் என்றும் தூய்மையான நிருவாகத்துக்கான ஆணையை நிறைவேற்றியிருக்கிறார் என்றும் வாதிடுகிறார்கள். அரசியல் ரீதியான பாதிப்புக்கள் எவ்வாறாக இருந்தாலும், உள்ளூராட்சி நிருவாகப் பதவிகளில் இருப்பவர்கள் கடுமையான சட்ட மற்றும் நெறிமுறைத் தரங்களுக்கு இணங்க நடப்பதை ஆளுநரின் நடவடிக்கை உறுதி செய்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இதற்கு நேர்மாறாக, ஆதுநரின் நடவடிக்கை வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் , சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சட்ட அவதானிகளின் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த எதிர்ப்புக்கள் முக்கியமாக, பயன்படுத்தப்பட்ட அதிகாரத்தின் தன்மை மற்றும் நிலைநிறுத்தும் முன்னுதாரணம் ஆகியவற்றின் மீதே கவனம் செலுத்துகின்றன.

மாகாணசபை கட்டமைப்பிற்குள் இருக்கும் ஜனநாயகக் குறைபாடே முக்கிய விமர்சனமாக முன்வைக்கப்படுகிறது. மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி பிரதிநிதிகளின் மக்கள் ஆணையை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுநர் திடீரென்று இரத்துச் செய்வது அப்பட்டமான ஜனநாயக விரோதம் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

அந்தந்த உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்களின் கீழ் இந்த பதவி நீக்கங்கள் செய்யப்பட்டதாக வர்த்தமானியில் கூறப்பட்டிருந்தாலும், அதற்கான குறிப்பிட்ட உண்மைத் தரவுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் குறித்த முழுமையான விபரங்கள் வர்த்தமானியின் வாசகங்களில் உள்ளடக்கப்படவில்லை என்று சட்டவாதிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இங்கு வெளிப்படைத் தன்மை இல்லை என்பதால் ஆளுநரின் நடவடிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது அல்லது தன்னிச்சையானது என்ற குற்றச்சாட்டுக்கு வழிவகுக்கிறது. இது குறித்து தெளிவுபடுத்த வேண்டியது ஆளுநரின் பொறுப்பாகும்.

அதேவேளை.. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் கீழ் அதிகாரப்பகிர்வு தொடர்பிலான விவாதங்களில் மாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கும் பரந்தளவு நிறைவேற்று அதிகாரம் தொடர்பிலான சச்சையை மீண்டும் இந்த பதவி நீக்கங்கள் மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டுவந்திருக்கின்றன.

## நீதியும் பாசாங்குத்தனமும் அரசியலும்

இலங்கையில் எந்தவொரு அரசியல் நிறத்தைக் கொண்ட அரசாங்கங்களும் தங்களுடைய அரசியல் எதிரிகள் கைது செய்யப்படும்போது, "குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி" என்ற அடிப்படைச் சட்டக் கோட்பாட்டைப் பொதுவாகப் பின்பற்றுவதில்லை.

ஒரு புதிய அரசியல் கலாசாரத்தைக் கொண்டுவருவோம் என்ற தேர்தல் வாக்குறுதியை அளித்தபோதிலும், தேசிய மக்கள் சக்தி நிர்வாகமும் இதில் விதிவிலக்காக இருக்கத் தவறிவிட்டது.

அதன் அரசியல்வாதிகளும் பிரசாரகர்களும் காவலில் வைக்கப்படும் தங்களது அரசியல் எதிரிகளை இரக்கமின்றி வசை பாடுகிறார்கள். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தங்களது எதிரிகளை, குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றவாளிகளாகவே அவர்கள் கருதுகிறார்கள் போலும்.

"குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி" என்ற கோட்பாட்டை இப்படி தலைகீழாக மாற்றுவது பேரழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இந்த நாட்டில் கடந்த கால ஆயுத மோதல்களின் போது நிகழ்ந்த ஏராளமான தன்னிச்சையான மரண தண்டனைகள் மற்றும் அரசியல் படுகொலைகளே இதற்கு சான்றாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ( ஆகிய அனைத்துமே தங்களது அரசியல் எதிரிகளை உடல் ரீதியாக ஒழித்துக் கட்டும் பாவத்தைச் செய்துள்ளன.

தற்போதைய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைவர்கள், 2010 முதல் 2015 வரை சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இருந்தபோது, ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை ஒரு கங்காரு நீதிமன்றமாக (முறையற்ற நீதிமன்றமாக) மாற்றி, அப்போதைய பிரதம நீதியரசருக்கு எதிராகச் செயற்பட்டு, அவரைப் பதவியிலிருந்து விரட்டியடித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் நேர்மையான அரச அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல்களைத் தொடுத்ததோடு, சந்தேகநபர்களைக் குற்றவாளிகளைப் போலவே நடத்தியது.

கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களின் குற்றத்தை ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்கூட்டியே தீர்மானித்திருக்கிறது. காவலில் உள்ள போதைப் பொருள் வியாபாரி ஒருவரின் மனைவியிடம் இலஞ்சம் பெற முயன்றதாகக் கூறப்படும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் மகன் ரகித மற்றும் ஹொரண தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் சரித் அபேசிங்க ஆகியோரும் இதில் அடங்குவர்.

சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதிலும், அனைத்து மீறல் குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்பதிலும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எனவே, காவலில் வைக்கப்பட்டுள்ள இந்த மூவரின் நியாயமான உரிமைகள் மீறப்படாத வரை, அவர்களின் கைதுக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது.

நியாயமான விசாரணைக்குப் பிறகு அவர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தப்பணி கற்றறிந்த நீதிபதிகளிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்த கைதுகளில் இருந்து அரசாங்கம் அரசியல் இலாபம் பெற முயற்சிக்கக் கூடாது. ராஜபக்ச மற்றும் அபேசிங்க குறித்து அமைச்சர்கள் உட்பட தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் வெளியிட்டு வரும் பல்வேறு அறிக்கைகளில் இருந்து தெரிவது என்னவென்றால், அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாலேயே குற்றவாளிகளாகக் கருதப்பட வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது என்பதாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி அபேசிங்கவின் கட்சி அங்கத்துவத்தை இடைநிறுத்தியுள்ளதுடன், ஒழுக்காற்று விசாரணையையும் ஆரம்பித்துள்ளது. இத்தகைய நடவடிக்கை வரவேற்கத்தக்கது. எனினும், அபேசிங்கவிற்கு தனது தரப்பு நியாயத்தைக் கூறவும், தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இயற்கை நீதியின் கோட்பாடு நிலைநாட்டப்பட வேண்டும்.

**முன்னாள் எரிசக்தி அமைச்சர் குமார ஜய கொடிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஊழல் குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தபோது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெட்கமின்றி அவரை முழுமையாகப் பாதுகாத்தது. அவரை அமைச்சரவையில் வைத்திருப்பது அரசாங்கத்திற்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்திய போதே அவர் பதவியிலிருந்து விலகினார்.**

நாகரீகமடைந்த உலகில் இத்தகைய விடயங்கள் இவ்வாறுதான் கையாளப்படுகின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளும் பிரசாரகர்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் அணிகளுக்குள் பாதாள உலகத் தொடர்புகளைக் கொண்ட நபர்கள் இருப்பதாகத் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால், குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் தங்களது உறுப்பினர்களை எவ்வாறு கையாள்வது என்று மற்ற அரசியல் கட்சிகளுக்குக் கூறுவதற்கு முன்னர், அவர்கள் தங்களது சொந்த வீட்டைச் சீரமைக்க வேண்டும்.

முன்னாள் எரிசக்தி அமைச்சர் குமார ஜய கொடிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஊழல் குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தபோது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெட்கமின்றி அவரை முழுமையாகப் பாதுகாத்தது. அவரை அமைச்சரவையில் வைத்திருப்பது அரசாங்கத்திற்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்திய போதே அவர் பதவியிலிருந்து விலகினார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? குறைந்த பட்சம் அவருக்கு எதிராக ஒரு ஒழுக்காற்று விசாரணையை யாவது நடத்தியுள்ளதா? அவரது கட்சி அங்கத்துவத்தை ஏன் அது இன்னும் இடைநிறுத்தவில்லை?

**(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம், 26 ஜூன் 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாரம் ஒருசிந்தனை 5

## வினையும் அறமும்

விக்கல் விகுதி விசை விடியல் விடு விடை விண் விதை விம்மல் வியப்பு வியவு விரிவு விருது விருந்து வினை வில் விலா விலை விழா விழி விளக்கு விளம்பு விளி விளை விரல் விறல் விறகு வினவு வினை இவை யாவும் வி... எனும் எழுத்தை முதலாகக கொண்ட தமிழ்ச் சொற்கள்.

ஒன்றிலிருந்து மற்றதாகி வேறுபடுகின்ற... என்ற பொருளே இச் சொற்கள் அனைத்திலும் தொக்கி நிற்கும், மறைந்திருக்கும்.

**மூலம்** - அதிலிருந்து சற்றே மாறுபடுதல், தொடர்ந்து மாறுபடுதல் அதனால் வேறுபடுதல் என்பதே வினை.

தொழில் பணி செயல் முயற்சி வஞ்சகம் தந்திரம் கருத்து தொல்லை எனப் பல பொருள்களில் வரும் ஒரே சொல் வினை.

அசையாமல் இருப்பது மூலம். அசைவது வினை. அசைவு தானாக எனின் உயிர். தானாக அசைவதால் உயிரோடு கூடப் பிறந்ததே வினை. அறிவியல் கருத்து. உயிரியல் கருத்து.

திருக்கயிலாயம் தொடக்கம் கதிர்காமம் வரை நீண்ட, காந்தாரம் முதலாக ஐராவதி ஆறு வரையாகப் பரந்த நிலப்பரப்பில், வினைக் கொள்கையே தத்துவக் கொள்கை.

தமிழ் தவிர்ந்த ஏனைய மொழிகளில் கர்மா, கர்மம், கருமம். தமிழில் வினை.

உயிரை வினைக்கு தூண்டுவது. உயிரை அசைவிப்பது. உயிராய் நிறவுருவில் மறைந்திருக்கும் மரபணு. அம் மரபணு இன்றி உயிர் இல்லை.

மரபணு இயக்காமல் வினை இல்லை. வினைக் கொள்கை எனில் மரபணுக் கொள்கை. மரபணுக்களின் தொகுப்பான நிறவுருக் கொள்கை. அதுவே தமிழரின் வினைக் கொள்கை.

வினைகள் - நல்வினைகள் - தீவினைகள். நடுநிலை வினை இல்லை.

**நல்வினைகள் அறம்.**

விடாப்பிடியாக ஒரே வினையைத் தொடர்க. மீண்டும் மீண்டும் அதே வினையில் ஈடுபடுக. ஒருவர் தொடர்ந்து செய்கிறரா? மரபணு மீள் செயல்களைக் குறித்துக் கொள் கிறது. இவர் ஒரே செயலில் பழகிக் கொள்கிறார். மரபணு வில் அந்தச் செயலுக்குத் தேவையான ஆணைகள் நிலை பெறுகின்றன.

உடுக்கை இழந்தவன் கை, (குறள்: 788) என்பார் வள்ளுவர். தன்னை அறியாமல் வழுவும் உடை நோக்கிக் கை போகிறதே. அதுவே பழக்கம் வழக்கம். மரபணுவில் இணைந்து கொள்ளும் பயிற்சி.

ஒருமுறை அந்தப் பயிற்சி பழக்கம் வழக்கம் மரபுனுவில் இணைந்து விட்டால், அதுவும் சிறு வயதில் இணைந்து விட்டால், அடுத்த தலைமுறைக்குப் போகும். எழுகின்ற தலை முறைகளில் எல்லாம் இருக்கும் என்கிறார் வள்ளுவர்.

***ஒருமைக்கண்***
***தான் கல்வி கல்வி***
***ஒருவற்கு எழுமையும்***
***ஏமாப் புடைத்து*** (குறள்: 398).

வினைக்கு மூலமான மரபணுவில் 1.5 வீதம் புரத ஒழுங்கு மட்டுமே உடலமைப்புக் கூறுகளின் வேர். எஞ்சிய 98.5 புரதங்களும், பயிற்சி பழக்கம் வழக்கம் இவற்றை ஒரு தலை முறையில் உள்வாங்கி அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்றன. எழுகின்ற தலைமுறைகளுக்கு அவற்றை அனுப்பி, மனித நாகரீக வளர்ச்சிக்கு உதவுகின்றன.

*Only about 1.5% of the DNA consists of protein-coding genes that determine traits such as eye colour, height and hair type. The other 98.5%, once written off as 'junk DNA', is now increasingly recognized as an important part of our genome that controls when and where genes are switched on, influencing development, cellular processes and even human evolution. (Why repetitive DNA matters for human brain evolution and disease By Alexis Bento Luis - published - 25 August 2025)*

2057 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொன்னதை அண்மைய அறிவியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

உயிரால் உள்வாங்கப்படும் வினை, "... நுகர் வினை.." எனக் கூறுவார் 600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார். திருவருட்பயன், 5-அருளது நிலை, பாடல் 2.

வினைக் கொள்கையை சமயக் கொள்கையாக்கியோர் முனிவர் அறிஞர் புலமையாளர் திறமை மிக்கோர். சமயக் கொள்கைகள் அறிவு குறைந்தோர் வாழ்வியலில் நம்பிக்கைகள் ஆகின்றன.

பயன் தரும் அறிவியல் கொள்கைகளை அறிவு குறைந் தோர் புரிந்து கொள்வது எளிதல்ல.

அறிவு குறைந்தோரும் கடைப்பிடித்தால் மனித நாகரீகம் மேலும் வளர்ச்சி அடையும் என்பதால் சமயக் கொள்கையாக தத்துவக் கொள்கையாக மாறியதே அறிவியல் - உயிரியல் கொள்கையாகிய வினைக் கொள்கை.

நல்வினைகளைத் தொடர்ந்து பயிற்சி செய். அவற்றை வாழ்வியல் ஆக்கு. செய்யும் காலத்தில் உனக்கு அவை பயன் தரவில்லையே எனக் கருதிக் கைவிடாதே. அன்றறிவாம் என்னாது அறம் செய்க. (குறள்: 36)

எழுகின்ற தலைமுறைகளை அறம் மேம்படுத்தும். மனித நாகரீகத்தை வளர்க்கும். ஆறாவது அறிவன்றி ஏழாவது அறிவும் மனிதனுக்காகும்.

700 ஆண்டுகளுக்கு முந்தைய மெய்கண்டாரின் சிவஞானபோதம், 12ஆம் சூத்திரம் 7ஆவது வெண்பாப் பாடல்.

***வினையால் அசத்து***
***விளைதலான் ஞானம்***
***வினைதீரின் அன்றி***
***விளையா - வினைதீர***
***ஞானத்தை நாடித்***
***தொழவே அதுநிகழும்***
***ஆனத்தால் அன்பிற் றொழு.***

*12 திருமுறைகள்.*
*10ஆம் திருமுறை.*
*பல நூற்றாண்டுகளுக்கு முன்பு திருமூலர் இயற்றிய திருமந்திரம் - 9 தந்திரங்கள். 8ஆம் தந்திரம் - 33ஆவது சுத்தா சுத்தம், பாடல் எண் : 11*

***வினையால் அசத்து***
***விளைவ துணரார்***
***வினைஞானந் தன்னிலே***
***விடாதுந் தேரார்***
***வினைவீட வீடென்னும்***
***பேதமும் ஓதார்***
***வினையாளர் மிக்க***
***விளைவறி யாரே.***

—மறவன்புலவு
க. சச்சிதானந்தன்

# இந்தவார ராசிபலன் 28.06.2026 - 04.07.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 15

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, உங்களுடைய சாமர்த்தியமான செயல்களால் எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். எதை செய்ய நினைத்தாலும் அதை மன நிறையுடன் செய்வது நன்மையை தரும். யாரிடத்திலும் வீண் வாக்குவாதம் செய்ய வேண் டாம். இரவு நேர வாகன பயணங்களை தவிர்க்கவும். உத்யோகத்தில் கவனமாக பணிகளை மேற்கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்கள் புரியவரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் நிலவிய பொருளாதார சிக்கல்கள் படிப்படியாக குறையும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் சிரமம் இருக்கும். தெய்வ பிரார்த்தனைகள் நிறைவேறும். மனைவிக்கிடையே சின்னச் சின்ன கருத்து வேற்றுமைகள் வரும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். வாகனங்களில் செல்லும் போது பொறுமை அவசியம். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் பல புதுமைகள் நடக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, குடும்பத்தில் ஒரு சில கஷ்டங்கள் வந்தாலும் அதை திறமையாக சமாளித்து வெற்றி காண முடியும். பண சேமிப்பில் கூடுதல் கவனம் செலுத்தவும். புது நட்பு வழியில் நிறைய ஆதாயங்கள் இருக்கும். கணவன் மனைவிக்கிடையில் பனிப்போர் ஏற்படும். அக்கம் பக்கம்தினருடன் நல்லுறவு ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை இருக்கும். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பாதையில் செல்லும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, எதை செய்ய நினைத்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கி மனநிம்மதி ஏற்படும். பண புழக்கத்தில் தடை வரலாம், இருப்பினும் அதை சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். கணவன் மனைவிடையே நெருக்கம் உண் டாகும். தொடர் பயணங்களால் அலைச்சல் ஏற்படும். சமூகத்தில் நல்ல அந்தஸ்து கிடைக்கும். உங்கள் கை ஓங்கியே நிற்கும். தொழில், வியாபாரத்தில் கடுமையாக உழைக்க வேண்டிவரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, குடும்ப விஷ யங்களை பற்றி வெளியில் பகிராமல் இருப்பது நல்லது. புது பொருள் சேர்க்கை உண்டாகும். மற்றவர்களிடம் பேசும் வார்த்தைகளில் எப்போதும் நிதானம் தேவை. குடும்ப முன்னேற்ற பாதையை நோக்கி செல்லும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். நீண்ட நாட்களாக நடக்காத காரியம் ஒன்று நடந்து முடியும். உத்யோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, உங்களது உயர்வான எண்ணங்களும், நேர்மையான சிந்தனைகளும் உங் களை பெரியளவில் உயர்த்தும். பிரிந்து சென்ற கணவன் மனைவி மீண்டும் ஒன்று சேருவர். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல தகவல் வரும். வாகன பயணத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் அனு சரித்து செல்வது பல வழியில் நன்மையை தரும். உத்யோகத்தில் ஈகோ பிரச்னையை தவிர்க்க வும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் சுபிட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். பொருளாதார உயர்வால் வாழ்க்கைத் தரம் உயரும். வீண் விவாதங்களை தவிர்க் கவும். காரிய தடை விலகும். குடும்பத்தில் பல நல்ல விஷயங்கள் நடக்கும். உத்யோகத்தில் இட மாற்றம் ஏற்படும். தொழில், வியாபாரம் விருத்தியடையும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார ராசிபலன்படி, நீண்ட நாள் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த முடியும். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். பொருளாதார சிக்கல் வந்தாலும் பெரிதாக பாதிக்காது. பகடன் வாங்கும் சூழ்நிலையை தவிர்த்து வரவும். சுப காரி யங்கள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் புது நபர்களின் வருகை இருக்கும். உத்யோகத்தில் முழு கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரம் சிறக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன் படி, பொது நல காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். சுற்றி இருப்பவர்களிடம் அனுசரித்து போவதால் மட்டுமே எல்லா பிரச்சனைகளும் சரி செய்து கொள்ள முடியும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். பயணங்களால் செலவுகளும் அலைச்சல்களும் ஏற்படும். உத்யோகத்தில் மனநிறைவு ஏற்படும். தொழில், வியபாரத்தில் மேன்மை நிலை உண்டாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, உங்களது செயல்களில் வேகமும், விவேகமும் வேகமாக இருக்கும். உங்கள் சுய கௌரவத்தை விட்டு தர வேண்டாம். குடும்ப பொருளாதாரம் வெகுவாக உயரும். பணம் எவ்வளவு வந்தாலும் அதற்கேற்றாற் போல செலவுகளும் இருந்து கொண்டே இருக்கும். சொந்த வீடு, வாகனம் வாங்கும் யோகமும் அதனால் கடன்களும் உண்டாகும். குடும்பத்தில் இருந்த குழப்ப நிலை நீங்கும். உத்யோகத்தில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் விரிவாக்கம் ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, பேச்சில் எப்போதும் நிதானமும் செயலில் பொறுமையும் இருப்பது நல்லது. குடும்பத்தின் அடிப்படை வசதிகளை பெருக்கிக்கொள்ள முடியும். முக்கிய தருணங்களில் முடிவு எடுப்பதில் சிரமம் ஏற்படும். பெரியோர்களின் ஆலோசனைகள் கைகொடுக்கும். புதிய மனிதர்களின் சந்திப்பு கிட்டும். பொது பிரச்சனைகளில் அதிகம் தலையிடாமல் இருப்பது நல்லது. உத்யோகத்தில் ஏற்பட்ட சில தடைகள் நீங்கும். புது தொழில் யோகம் அமையும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, முக்கிய தருணங்க ளில் முடிவு எடுப்பதில் அவசரம் காட்ட வேண்டாம். தினசரி செலவுகள் கட்டுப்படுத்த புது யுக்திகளை கையாள வேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த பகைமை நீங்கும். திட்டமிட்ட பயணங் களை மேற்கொள்ள முடியும். பெண்கள் வழியில் சில தொந்தரவு வரலாம். பிறர் விஷயங்களில் தலையிடாதிருந்தால் வீண் பிரச்னைகளிலிருந்து தப்பிக்கலாம். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். தொழில், வியாபாரத்தில் சாதிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியலமைப்பு யோசனைகள் வரைவுகளை தனித்தனியாக தயாரிப்பதில் தமிழ் அணிகள்



வீரகத்தி தனபாலசிங்கம்


சுதந்திர இலங்கை மூன்று அரசியலமைப்புக்களை கண்டிருக்கிறது. சோல்பரி அரசியலமைப்பு (1948 - 1972), முதலாவது குடியரசு அரசியலமைப்பு (1972 - 1978) மற்றும் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு (1978 .....) ஆகியவையே அவையாகும்.

அவற்றில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கொண்டு வந்த இரண்டாவது குடியரசு அரசியலமைப்பே மிகவும் நீண்டகாலமாக (48 வருடங்கள்) நடைமுறையில் இருந்து வருகிறது. அது அரை நூற்றாண்டைக் கடந்து விடுவதற்கு முன்னதாக (இன்னமும் இரு வருடங்களுக்குள்) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரக்கூடியதாக இருக்குமா?

தேசிய மக்கள் சக்தி இரு வருடங்களுக்கு முன்னர் தேசிய தேர்தல்களில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் (2015 - 2019) அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுப்பதாக அநுர குமார திசநாயக்க ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தார்.







ஆனால், அவர் பதவிக்கு வந்து இரு வருடங்கள் நிறை வடைவதற்கு இன்னமும் மூன்று மாதங்கள் இருக்கின்ற நிலையில், அவரது தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான பாராளுமன்றப் பலம் இருக்கின்ற போதிலும், புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை முன்னெடுக்கப்படுவதற்கான அறிகுறிகளைக் காணக்கூடியதாக இல்லை.

பிரமாண்டமான பாராளுமன்றப் பெரும்பான்மையை தந்த மக் கள் தங்களிடம் பாரிய எதிர்பார்ப்புக்களைக் கொண்டி ருக்கிறார்கள் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் தின் தலைவர்கள் அறிவார்கள். ஆனால், தேர்தல்களின் போது வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அவர்கள் தடுமாறுகிறார்கள்.

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை மூன்று வருடங்களுக்கு பின்னர் தொடங்கும் என்று பதவிக்கு வந்த ஆரம்பக் கட்டத்தில் அரசாங்கம் அறிவித்தது. அரசாங்கங்கள் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கான செயன்முறையை அவற்றின் பதவிக் காலத்தின் முற்பகுதியில் முன்னெடுப்பதே வழமை என்பதால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அந்த அறிவிப்பு இயல்பாகவே சந்தேகங்களைக் கிளப்பியது.

அரசாங்கத் தலைவர்களில் பெரும்பாலும் பிரதமர் ஹரிணி அமரசூரியவே புதிய அரசியலமைப்பு தொடர்பான விடயங்கள் குறித்து அவ்வப்போது பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கருத்துக்களைக் கூறி வந்திருக்கிறார். கடந்த வாரமும் கூட அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமையைக் கொடுக்கவில்லை என்பதை ஒத்துக் கொண்டதுடன் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

"அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைக்கு தற்போதைய காலப்பகுதியில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதை மறைக்காமல் ஒத்துக்கொள்கிறோம். இந்த விவகாரம் தொடர்பில் ஆரம்பக் கட்டக் கலந்தாலோசனைகளும் பூர்வாங்க நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. நாடு தற்போது முகங்கொடுக்கும் சவால் மிகு சூழ்நிலையில் பொருளாதாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய அத்தியாவசிய தேவைகளுக்கே அரசாங்கம் கூடுதல் முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறார்.

தங்களது அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இன்னமும் எஞ்சியிருக்கும் மூன்று வருடங்கள் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு போதுமானது என்று கூறிய பிரதமர் தாங்கள் முன்னெடுக்கும் மக்கள் நலச்சேவைகள் காரணமாக, தற்போதைய ஆட்சிக் காலத்துக்கு பின்னரும் தேசிய மக்கள் சக்திக்கு பலம்பொருந்திய ஆணையை மக்கள் மீண்டும் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார். புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு தேசிய மக்கள் சக்திக்கு இன்னொரு பதவிக் காலத்துக்கு ஆணையைத் தருமாறு அவர்கள் கேட்காமல் இருப்பார்கள் என்று நம்புவோமாக.

பிரதமர் நேர்காணலில் தெரிவித்திருக்கும் கருத்துக்களின் பிரகாரம் நோக்கும்போது பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பதன் காரணத்தினால்தான் அரசியலமைப்பை மாற்றும் விடயத்தில் அரசாங்கத்தினால் கவனத்தைச் செலுத்த முடியாமல் இருக்கிறது என்றால், அதற்கான செயன்முறைகளில் கவனத்தைக் குவிக்கக்கூடியதாக உகந்த சூழ்நிலை எப்போது உருவாகும் என்ற கேள்வி எழுகிறது. முழுமையான பொருளாதார மறுசீரமைப்பும் வறுமை ஒழிப்பும் குறிப்பிட்ட ஒரு நேர அட்டவணைக்குள் சாதிக்கக்கூடிய செயற்பாடுகள் அல்லவே.

எது எவ்வாறிருந்தாலும், புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையைப் பொறுத்தவரை, மற்றைய சகல விவகாரங்களுக்கும் அப்பால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பும் தேசிய இனப்பிரச்சினைக்கு பொருத்தமான அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டின் அடிப்படையில் காணப்பட வேண்டிய அரசியல் தீர்வுமே முதன்மைக்குரிய விவகாரங்களாகும்.

> இரு தமிழ் அரசியல் அணிகளுக்கும் இடையே ஒரு குறைந்தபட்ச கூட்டு இணக்கப்பாடு இல்லாதபட்சத்தில் தனித்தனியான அரசியலமைப்பு யோசனை வரைவுகளை அரசாங்கம் தமிழர்கள் மத்தியில் மேலும் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்தே அதை ஒழிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது. அதை ஒழிக்கப்போவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கிக்கொண்டு அதிகாரத்துக்கு வந்த எந்த ஜனாதிபதியுமோ அல்லது அரசாங்கமுமோ அதைக் காப்பாற்றவில்லை. தற்போதைய ஜனாதிபதி திசநாயக்கவும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாத ஜனாதிபதிகளின் பட்டியலில் இணைந்து கொள்வாரா இல்லையா என்பதை அறிய நீண்டகாலம் அல்ல, ஓரிரு வருடங்கள்தான் காத்திருக்க வேண்டும்.

அதிகாரப்பகிர்வு விடயத்தைப் பொறுத்தவரை, புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை தற்போதைய மாகாணசபைகள் முறைமை விட்டு வைக்கப்படும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது. ஜனாதிபதி திசநாயக்க மற்றும் அமைச்சர்களை விடவும் இதை உறுதியாக அடிக்கடி தெரிவித்து வந்திருப்பவர் அரசியல் ரீதியில் பலம் பொருந்தியவர் என்று கருதப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவே.

புதிய அரசியலமைப்பு வரும்வரை மாகாணசபைகள் தொடர்ந்து இருக்கும் என்றால், அதற்குப் பிறகு எத்தகைய அதிகாரப் பகிர்வு ஏற்பாடு கொண்டுவரப்படும் என்றோ அல்லது குறைந்த பட்சம் தற்போது மாகாண சபைகளிடம் விட்டு வைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களாவது புதிய ஏற்பாட்டில் உள்வாங்கப்படும் என்றோ எதையும் அவர்கள் கூறவில்லை. புதிய அதிகாரப் பகிர்வுக்கான அலகு எத்தகையதாக இருக்கும் என்றும் தெரிய வில்லை.

2025 உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் கட்சியின் வாக்குகளில் ஏற்பட்ட கணிசமான வாக்கு வீழ்ச்சி மாத்திரம்தான் அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை தற்போதைக்கு நடத்த விரும்பாமல் காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயங்களைக் கையாளுவதற்கு காரணம் என்று கூறமுடியாது. கோட்பாட்டு அடிப்படையில் அதிகாரப்பகிர்வுக்கு எதிரானவர்களாக இருந்துவரும் ஜே.வி.பி.யின் தலைவர்கள் மாகாணசபைகளை சாத்தியமானளவுக்கு சீர்குலைத்து சிங்கள தேசியவாத அரசியல் உணர்வுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருக்கவும் கூடும்.

அதனால், மாகாண சபைகளின் எதிர்காலம் கேள்விக் குள்ளாகியிருக்கும் நிலையில், தமிழ் அரசியல் சமுதாயம் கடைப்பிடிக்கக்கூடிய அரசியல் தந்திரோபாயங்கள் முக் கியத்துவம் பெறுகின்றன. அரசியல் தீர்வு யோசனை களை தமிழ்க் கட்சிகள் ஒருமித்து முன்வைக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக எப்போதும் இருந்து வருகின்ற போதிலும், துரதிர்ஷ்டவசமாக அதற் கான வாய்ப்புக்கள் என்றைக்காவது தோன்றும் என்று நம்பிக்கை வைக்க முடியவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் பரப்பில் தற்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியலமைப்பு யோசனைகளை வரைவதற்கான இரு தனித்தனியான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒன்று, சகல தமிழ்க் கட்சிகளையும் ஒருங்கிணைத்து வரைவைத் தயாரிப்பதற்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவை கடந்த பெப்ரவரியில் இருந்து முன்னெடுத்துவரும் முயற்சி மற்றையது ஈழத்தமிழர் அரசியல் நிர்ணய சபையின் முயற்சி.

தமிழ் கட்சிகளுடன் இதுவரையில் மூன்று கூட்டங்களை நடத்திய தமிழ் சட்டத்தரணிகள் பேரவை இறுதிக் கூட்டத்தில் அரசியலமைப்பு யோசனைகளை வரைவதற்கென்று ஒரு குழுவையுயும் நியமித்தது. இதற்குப் புறம்பாக, எந்தவொரு தமிழ்க் கட்சியும் தனியாக அல்லது கூட்டாக வேறு எந்த வரைவுச் செயன்முறையிலும் ஈடுபடுவதில்லை என்று முதற்கூட்டத்தின் இறுதியில் வெளியிப்பட்ட கூட்டறிக்கையில் கையெழுத்திட்ட சில கட்சிகளும் குழுக்களும் தற்போது ஈழத்தமிழர் அரசியல் நிர்ணயசபையின் செயற்பாடுகளுடன் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் நல்லூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய அரசியல் நிர்ணயசபையின் பொதுக்குழு அரசியலமைப்பு வரைவைத் தயாரிப்பதற்கென்று 33 பேரைக் கொண்ட 'வழிநடத்தல் குழுவொன்றை' நியமித்தது.

ஈழத்தமிழர் அரசியல் நிர்ணய சபையின் செயற்பாடுகளில் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையும் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை எழுதுவது என்றும் நல்லூர்க் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அரசியலமைப்பு வரைவுகளை உருவாக்குவது தொடர்பில் நிலவும் இந்த முரண்பாடு சமகால நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கு இசைவான முறையில் ஒன்றுபட்டுச் செயற்படுவதில் தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கும் இயலாமையை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. இந்த முரண்பாட்டின் பின்னணியில் உள்ள அரசியல் சக்திகளை அடையாளம் காண்பதற்கு கதிரியக்கப்படம் எதையும் எடுக்க வேண்டிய தேவையில்லை.

ஒரு புறத்தில், இலங்கை தமிழரசு கட்சி - ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அணிக்கும் மறுபுறத்தில், தமிழ் தேசிய மக்கள் முன்னணி - தமிழ் மக்கள் பேரவை அணிக்கும் இடையில் உள்ள அரசியல் போட்டித்தன்மையே அரசியலமைப்பு யோசனைகளை வரைவதற்கான இரு வெவ்வேறு முயற்சிகளின் பின்னணியில் உள்ள இயக்கவியலாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாக்குறுதிகளை நீதியாக மாற்றுதல்



கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கையர்கள் தங்கள் நாட்டின் சமீபத்திய சர்வதேச சாதனை குறித்து திருப்தியடைவதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன. 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய அமைதிச் குறியீட்டில் இலங்கை 14 இடங்கள் முன்னேறி, மதிப்பிடப்பட்ட 163 நாடுகளில் 67 வது இடத்தைப் பிடித்துள்ளது. ஊலகளாவிய அமைதி அதன் ஆரம்பகாலத்திலிருந்து பார்க்கும்போது மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படும் இவ்வேளையிலும், முன்னேற்றத்தை விடவும் அதிகமான நாடுகள் பின்னடைவைச் சந்தித்துவரும் ஒரு சூழலிலும், இலங்கையின் இந்த முன்னேற்றம் தனித்துத் தெரிகிறது.

இந்தத் தரவரிசை, கிட்டத்தட்ட மூன்று தசாப்தகாலப் போரிலிருந்து நாடு மீண்டுவந்ததையும் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொதுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான அதன் முயற்சிகளையும், சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை முறியடிப்பதில் காட்டிய மீட்சித் திறனையும் பிரதிபலிக்கிறது. ஊலகளாவிய அமைதிச் குறியீடானது நிறுவனங்களின் பலம், சமூகப் பாதுகாப்பு மற்றும் அமைதியான முறையில் மோதல்களைக் கையாளும் சமூகங்களின் திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே மதிப்பிடுகிறது.

நாட்டின் எதிர்காலத்தின் மீது தொடர்ந்து இருளைக் குவியவிடும் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் இதுவரை பெற்றுக்கொண்ட நன்மைகளை மேலும் வலுப்படுத்துவதுமே தற்போதைய சவாலாகும். இந்தச் சூழலில்தான், அரசாங்கத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட இரண்டு அறிவிப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டின் மிகவும் சர்ச்சைக்குரிய சட்டங்களில் ஒன்றான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இரண்டு மாதங்களுக்குள் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜிதஹேரத் அறிவித்துள்ளார்.

இதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஏற்கனவே அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அமைச்சரின் கூற்றுப்படி, ‘அரச பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்’ என்று அழைக்கப்படவுள்ள இந்தப் புதியசட்டம், சிவில் சமூகத்தின் பரிந்துரைகளை உள்ளடக்கியதுடன், பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான சர்வதேச தரநிலைகளுக்கு இசைவான வகையில் உருவாக்கப்படவுள்ளது.

அதேநேரத்தில், காணாமல் போனோர் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதில் அரசாங்கத்திற்கு இருக்கும் அர்ப்பணிப்பை நீதி, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிப் பகுதிக்கு விஜயம் செய்த அவர், நீதி நிலைநாட்டப்படும் வகையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் விரைவாக முடிக்கப்படவேண்டும் என்று கூறியதுடன், இப்பணிகளுக்குத் தேவையான நிதி மற்றும் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் உறுதியளித்தார்.


நீதிமன்ற மேற்பார்வையின் கீழ், தடயவியல் நிபுணர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் காணாமல் போனோர் விவகார அலுவலகத்தின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இந்த அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. அரசாங்கத்தின் இந்த வாக்குறுதிகள், பலதசாப்தங்களாக இலங்கையை உலுக்கிவரும் இரண்டு மிக முக்கியமான சர்ச்சைக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதாக அமைந்துள்ளன. மேலும், கடந்த காலத்தின் கடினமான பிரச்சினைகளை காலவரையின்றி ஒத்திவைப்பதைவிட, அவற்றுக்கு முகம்கொடுப்பதற்கான தகுந்தநிலையில் தற்போது நாடு இருப்பதை அரசாங்கம் நம்புகிறது என்பதையும் இவை உணர்த்துகின்றன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியின் காலநேரம் குறிப்பாகக் கவனிக்கத்தக்கது. அடுத்தடுத்து ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் பல ஆண்டுகளாக இந்த சட்டத்தை மாற்றுவதாக உறுதியளித்த போதிலும், அதைச் செய்யத் தவறின. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, 2017 ஆம் ஆண்டில் இலங்கை இந்த சட்டத்தை நீக்குவதற்கு ஒப்புக்கொண்டிருந்தது. ஆயினும், பலமுறை அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும் மீறிசட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

எனவே, அரசாங்கம் இப்போது ஏன் இதில் உறுதியாகச் செயல்பட முனைகிறது என்ற கேள்வி எழுகிறது. ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு விசாரணைகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியிருப்பது இதற்கொரு காரணமாக இருக்கலாம். 2019 ஆம் ஆண்டில் 260 க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்ட இந்தத் தாக்குதல்கள் குறித்த விசாரணையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த விசாரணைகள் இதே பாதையில் தொடர்ந்தால், தாக்குதல்களை நேரடியாக நடத்தியவர்கள் மட்டுமன்றி, அதற்குத் துணை நின்றவர்கள், அதற்கு வழிவகுத்தவர்கள் அல்லது ஒரு பரந்த குற்றச் சதியின் பின்னணியில் இருந்தவர்கள் வரையிலும் இந்த பொறுப்புக்கூறல் நீளக்கூடும்.

கொடுரமான ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் பொறுப்புக் கூறவைக்கப்பட வேண்டும் என்பதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையும் நீதியும் கிடைக்கவேண்டும் என்பதிலும் சமூகத்தில் பரந்த உடன்பாடு உள்ளது. இருப்பினும், பொறுப்பைத் தீர்மானிக்கும் இந்த செயல்முறை நியாயமானதாகவும், சட்டபூர்வமானதாகவும் பக்கச் சார்பற்றதாகவும் பொதுமக்களால் பார்க்கப்படுவது முக்கியமாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள், உரிய சட்ட வழிமுறைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கும் ஒரு



**பயங்கரவாதத் தடைச் சட்டநீக்கம், ஈஸ்டர் ஞாயிறு விசாரணைகள் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த உண்மையைக் கண்டறிதல் ஆகியவற்றில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புகள், பழைய அணுகுமுறைகளின் காலம் முடிந்துவிட்டது என்ற விழிப்புணர்வை உணர்த்துகின்றன. கடந்தகால வழிமுறைகளில் இருந்துவிடுபடுவதற்கான ஒரு வாய்ப்பு அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. இதற்கான பரீட்சை இப்போது அதனை நடைமுறைப்படுத்துவதிலேயே உள்ளது.**

வெளிப்படையான நீதித்துறை செயல்முறையின் மூலம் தண்டிக்கப்பட்டால், அதன் முடிவை ஒட்டுமொத்த சமூகமும் ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இங்குதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது முக்கியத்துவம் பெறுகிறது. நீண்டகாலத் தடுப்புக் காவல் மற்றும் விதிவிலக்கான அதிகாரங்களோடு தொடர்புடைய ஒரு சட்டத்திலிருந்து, மனித உரிமைத் தரங்களுக்கு இணங்கக்கூடிய ஒரு சட்டத்திற்குமாறுவது, இந்த விசாரணைகளின் நம்பகத்தன்மையை பலவீனப்படுத்துவதற்குப் பதிலாகமேலும் வலுப்படுத்தும். வெளிப்படையாக நியாயமான ஒரு செயல்முறையின் மூலம் பெறப்படும் பொறுப்புக்கூறலே நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியதாக அமையும். அத்துடன் அரசியல் உள்நோக்கம் அல்லது தெரிந்தெடுத்து நீதி வழக்குதல் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அது ஆளாகாது.

செம்மணி அகழ்வாராய்ச்சிகள், இத்தகைய நம்பகத்தன்மையை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதற்கான ஒரு முன்மாதிரியை வழங்கக்கூடும். இந்த செயல்முறை நீதித்துறை மேற்பார்வையின் கீழும் சுயாதீன நிபுணர்களின் பங்கேற்புடன் முழுமையான பொதுப் பார்வையின் கீழும் நடைபெற்று வருகின்றது. இதிலிருந்து எத்தகைய முடிவுகள் வெளிவந்தாலும், எத்தகைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், இந்த செயல்முறை வெளிப்படையானதாகவும் பொறுப்புக் கூறத்தக்கதாகவும் இருப்பதால், அதுவே மதிப்பை ஏற்படுத்தவேண்டும்.

இதே கொள்கைகளை உயிர்த்தஞாயிறு விசாரணைகளுக்கும் பயன்படுத்தலாம். விசாரணைகள் பகிரங்கமாக நடத்தப்படும் போதும், சட்டப்பூர்வ பாதுகாப்புகள் மதிக்கப்படும் போதும், பாதிக்கப்பட்டவர்களினதும் குற்றம் சாட்டப்பட்டவர்களினதும் உரிமைகளும் பாதுகாக்கப்படும் போதும் பொதுமக்களின் நம்பிக்கை வலுப்பெறுகிறது. இந்த விசாரணைகளின் முக்கியத்துவம் அந்தத் துயரத்திற்கு அப்பாலும் நீடிக்கக்கூடும். ஈஸ்டர் ஞாயிறு சதித்திட்டத்திற்கு இறுதியில் பொறுப்பானவர்களாகக் கண்டறியப்படுபவர்களுக்கும் போரின் இறுதிக் கட்டங்களில் அதிகாரத்தைப் பயன்படுத்திய அரச இயந்திரத்தின் கூறுகளுக்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

புல ஆண்டுகளாக, போர்க் கால அத்துமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை கையாள்வதில் இலங்கை மல்லூக்கட்டி வருகிறது. பலரால் யுத்தகால ஹீரோக்களாகக் கருதப்பட்டவர்களின் நடத்தையை இது தொடுவதால், இந்த பிரச்சினை அரசியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த ஒன்றாகவே இருந்து வருகிறது. எவ்வாறாயினும், போதிய ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில், சிரேஷ்ட அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு பொறுப்புக்கூற வைக்கப்படமுடியும் என்பதை ஈஸ்டர் ஞாயிறு விசாரணைகள் உறுதிப்படுத்தினால், ஒரு முக்கியமான முன்மாதிரியை ஏற்படுத்துவதாக அமையும்.

ஈஸ்டர் ஞாயிறு விசாரணைகள் மற்றும் அதனைத் தொடரும் நீதித்துறை செயல்முறைகள் மூலம் இந்ததளம் சீரமைக்கப்பட்டவுடன், தற்போது ஆதாரங்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் கண்டறியப்பட்டு வரும் செம்மணி போன்ற தளங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட போர்க் கால அத்துமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை கையாள்வது கடினம் குறைந்ததாக மாறக்கூடும். இது சர்வதே சரீதியில் இலங்கையின் நிலையையும் வலுப்படுத்தும்.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவடைந்ததில் இருந்து, இலங்கைஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் பல்வேறுமட்டங்களிலானகண்காணிப்பின் கீழ் இருந்து வருகிறது. கடந்தகாலமனிதஉரிமைமீறல்கள் தொடர்பானஆதாரங்களைதொடர்ந்துசேகரித்துபாதுகாப்பதற்காக, மனிதஉரிமைகளுக்கானஉயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆணையை 2025 அக்டோபரில் பேரவை புதுப்பித்தது. இலங்கைமீதானஅடுத்தஆய்வுஎதிர்வரும் செப்டம்பரில் நடைபெறவுள்ளது.

இலங்கை தனது சொந்த நிறுவனங்கள் மூலமாகவும் தனது சொந்த ஜனநாயக விழுமியங்களின் படியும் இத்தகைய கடினமான பிரச்சினைகளைக் கையாளும் திறன் கொண்டது என்பதை நிரூபிப்பதற்கான ஒரு வாய்ப்பு இப்போது அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கும் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்குமான அர்ப்பணிப்புகளை இந்த நோக்கில் பார்க்க முடியும்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்றும், அரசாங்க அதிகாரிகளிடமும் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களிடமும் தாங்கள் முழு நம்பிக்கையுடன் ஒப்படைத்த தகவல்களுக்கு என்ன நடந்தது என்றும் கேள்வி எழுப்புகின்றனர். பொறுப்புக்கூறலும் தேசிய உரிமையும் எவ்வாறு கைகோர்த்துச் செல்லமுடியும் என்பதைக் காட்டுவதற்கான வாய்ப்புகள் இவைகளாகும்.

மறுசீரமைப்பு அல்லது நல்லிணக்கம் என்பது உண்மையை உண்மையாக நினைவில் வைத்திருக்கும் கடினமான பணியை வேண்டிநிற்கிறது. பலநேரங்களில், இலங்கை கடினமான பிரச்சினைகளை ஒத்திவைப்பதன் மூலம் ஸ்திரத்தன்மையை நாடியுள்ளது. எவ்வாறாயினும், தீர்க்கப்படாத குறைகள் மறைந்துவிடுவதில்லை. ஆவை தலைமுறைகளைக் கடந்துநீடித்து, அரசியல் அணுகுமுறைகளையும் சமூக உறவுகளையும் தொடர்ந்து வடிவமைக்கின்றன.

ஊலகளாவிய அமைதிச் சுட்டியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் கொண்டாடப்படவேண்டிய ஒரு சாதனையாகும். ஆனால் அமைதியின் உண்மையான அளவுகோல் என்பது மோதல்கள் இல்லாதிருப்பது மட்டுமல்ல. அதுநீதி, நம்பிக்கை மற்றும் பொது நிறுவனங்கள் மீதான விசுவாசம் ஆகியவை நிலவுவதாகவும் இருக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டநீக்கம், ஈஸ்டர் ஞாயிறு விசாரணைகள் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த உண்மையைக் கண்டறிதல் ஆகியவற்றில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புகள், பழைய அணுகுமுறைகளின் காலம் முடிந்துவிட்டது என்ற விழிப்புணர்வை உணர்த்துகின்றன.

கடந்தகால வழிமுறைகளில் இருந்துவிடுபடுவதற்கான ஒரு வாய்ப்பு அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. இதற்கான பரீட்சை இப்போது அதனை நடைமுறைப்படுத்துவதிலேயே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபைகளுக்கான தேர்தல் அற்றுப்போகும் நிலையிலுள்ளதா?

‘வடக்குமக்களுக்கு 13வது திருத்தச் சட்டமும் அதிகாரப் பகிர்வும் அவசியமாக இல்லை. பொருளாதாரபிரச்சனைகளுக்கானதீர்வேஅவர்களுக்குஅவசியமாகக் காணப்படுகிறது. தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் அதிகாரத்தைதக்கவைத்துக்கொள்ளதமக்குவாய்ப்பான வசனங்களைபயன்படுத்திவருகின்றனர்’

- ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா.

**பனங்காட்டான்**

பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் அல்லது மாற்றம், புதிய அரசியலமைப்பு தயாரிப்பு, மாகாணசபைகளுக்கான தேர்தல் ஆகிய மூன்று சொல்லாடல்களும் கடந்த சிலவாரங்களாக பெருமளவில் பேசப்படுகிறது.

அரசாங்க தரப்பினாலும் எதிர்க்கட்சிகளாலும் வெவ்வேறு விதமாக இவை அலசப்படுகின்றன, நோக்கப்படுகின்றன. சகல ஊடகங்களும் இவ்விடயங்களுக்கு மிகமிக முக்கியத்துவம் கொடுப்பதை பார்க்கமுடிகிறது.


தர்மிஸ்டர் என்று தம்மைஅழைத்துக் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஒரு வருடத்துக்கென மட்டும் 1979ம் ஆண்டு தமது ஜனாதிபதி ஆட்சியின்போது அறிமுகம் செய்த தற்காலிக பயங்கரவாத தடைச்சட்டம், 1982ம் ஆண்டில் அவராலேயே நிரந்தரமானதாக சட்டமாக்கப் பட்டது. 44 ஆண்டுகள் ஆகியும் பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களைக் காட்டிதொடர்கிறது. இதன்மேல் குந்தியிருந்து ஆட்சிபுரிவது சிங்கள தலைவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பாக உள்ளது.

தேர்தல் காலங்களில் அனைத்துக் கட்சிகளும் தாங்கள் பதவிக்கு வந்ததும் இச்சட்டத்தை நீக்குவோம் என்று கூறி வந்தன. அநுரகுமரவின் தேசிய மக்கள் சக்தியும் அவ்வாறுதான். ஆனால் இதன் சுருதிமாறி புதியசட்டம் ஒன்றின் வாயிலாக பயங்கரவாத சட்டம் மாற்றப்படுமென்று இப்போது கூறப்படுகிறது. கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, பயங்கரவாத சட்டத்துக்கு முடிவுகட்டுவோம் என்று தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமர, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கு புதிய சட்டமொன்று உருவாக்கப்படுமென்ற கூறியுள்ளார்.பழைய கள்ளை புதிய பானையில் கொண்டுவருவது போன்றது இது.

புதிய அரசியலமைப்பு பற்றி அடிக்கடி தெரிவிக்கும் அரச தரப்பினர், அடுத்த இரண்டு வருடத்துக்குள் இதனைக் கொண்டுவரமுடியுமென்று கூறுகின்றனர். இன்னும் மூன்று மாதங்கள் கழிந்தால் ஜனாதிபதி தேர்தலும், ஐந்து மாதங்கள் கழிந்தால் பொதுத்தேர்தலும் இடம்பெற்று இரண்டு வருடங்கள் முடிந்துவிடும். அதன் பின்னரான இரண்டு வருடங்களை ஒருவாறு கழித்துவிட்டால் புதிய அரசியலமைப்பு பற்றி நினைப்பதற்கு எவருக்கும் நேரம் இருக்காது. அது அம்போ ஆகிவிடும்.

மாகாண சபை தேர்தல் என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் சிசேரியன் மூலம் பிரசவமான 13ம் திருத்தத்தின்அடையாளம். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு ஒரு சிறு தீர்வாக தமிழ் மக்களின் பூரண விருப்பமின்றி புகுத்தப்பட்ட முறைமை இது. மாமியார் மெச்சாத மருமகளாகவே இன்றுவரை இது இருந்து வருகிறது.

மாகாண சபை முறைமை தொடர வேண்டுமென்பதற்காக அரசாங்கத்தின் முகவர்களாக இருப்பவர்களை ஆளுனர்



களாக நியமித்து ஆட்சி நடத்தும் முறைமை இந்த வாரம்வரை பிரச்சனைக் குரியதாகவே தொடர்கிறது. அரசாங்க தரப்பினரைத்தவிர மற்றைய அனைத்து அரசியல் கட்சிகளும் மாகாண சபை தேர்தலை கேட்டவாறே உள்ளனர்.

எது கிடைக்காது என்று தெரிகிறதோ அதனைக் கேட்டுகேட்டு காலத்தை ஓட்டுவதுதான் அரசியல் என்பார்கள்.அதுவேதான் மாகாண சபை தேர்தலிலும் காணப்படுகிறது. இந்தத் தேர்தலைக் கோரும் எதிரணிகள் பற்றியநேர்மையான கருத்தை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான மகிந்ததேசப்பிரிய.

மாகாணசபைத் தேர்தல் இனி இடம் பெறுமா என்ற கேள்வி பல தடவைகள் இந்தப் பத்தியில் சொல்லப்பட்டுவந்தது. இதனை ஆமோதிக்கும் வகையில், மாகாண சபை தேர்தல் என்பது அற்றுப்போகும் நிலையை அடைந்துள்ளது என்று மகிந்த தேசப்பிரிய துணிச்சலாகக் கூறியுள்ளார். 2024ல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் முதலில் நடத்தப்படக்கூடியதாக இருக்குமென்ற கருத்தையும் இவர் முன்வைத்துள்ளார்.

‘மாகாணசபைத் தேர்தலை தாமதமின்றி நடத்தவேண்டுமென வலியுறுத்தும் மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தும் வலிமை தமிழரின் தலைமைக் கட்சி என்று கூறும் தமிழரசுக் கட்சிக்கு உள்ளதா? அப்படி இருக்குமாயின் அதற்காக மக்களை அணி திரட்டிகளத்தில் காட்ட வேண்டும். இதனைச் செய்யாதவரை மாகாணசபைத் தேர்தல் மக்களுக்கானதா அல்லது அரசியல்வாதிகளுக்கானதா என்ற கேள்வி, பதில் காணமுடியாது தொடர்ந்தவாறே இருக்கும்” என்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டதை இப்போது ஞாபகம் ஊட்டவேண்டியுள்ளது.

இந்தப் பந்தியின் தொடர்ச்சியாக ஒரு கேள்வியும் எழுப்பப்பட்டிருந்தது. அது பின்வருமாறு அமைந்திருந்தது. இதன் தொடர்ச்சியாக தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்களுடன் உரையாடும் சந்தர்ப்பம் இப்பத்தி எழுத்தாளருக்குக் கிடைத்தது. மார்ட்டின் வீதி மாபியாக்கள் என்று வர்ணிக்கப்படுபவரில் ஒருவரும் இதற்குள் அடக்கம்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் ஆட்பலம், நிலப்பலம், நிதிப்பலம் எல்லாவற்றிலும் முன்னணியில் நிற்பது தமிழரசுக் கட்சியாக இருப்பதால் மாகாண சபையை மக்கள் கேட்கின்றனர் என்ற பார்வையை ஓங்கச் செய்வதற்காக மக்கள் எழுச்சியை ஏற்படுத்தக்கூடிய போராட்டங்களை நடத்தமுடியாதா என்ற கேள்வி உரையாடிய ஒவ்வொருவரிடமும் முன்வைக்கப்பட்டது. எவருமே சாதகமாக பதில் தரவில்லை.

கட்சியின் ஒரு முக்கியபிரமுகர் சூடாக ஒரு கேள்வியை திருப்பித் தொடுத்தார். சில வாரங்களுக்கு முன்னர் விரைவாக வீதிகளில் இறங்கி ஒரு போராட்டம் நடத்துவோமென்று பதில் செயலாளர் சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தாரே, அது ஏன் இடம்பெறவில்லையென்று அவரது வினாஅமைந்திருந்தது. இதற்கான பதிலையும் அவரே பின்வருமாறு சொன்னார்.

‘இப்ப எல்லாம் முன்னர் போல போராட்டம், கர்த்தால், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்று நடத்தமுடியாது. மக்கள் அதற்கு முன்வரமாட்டார்கள். இதனை நன்கறிந்த பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் அறிவுறுத்தலின் பேரில்தான் சுமந்திரன் முன்னறிவிப்புக் கொடுத்த போராட்டம் நிறுத்தப்பட்டது” என்றுஎடுத்துக் கூறினார். இதன் உண்மைபொய் எவருக்கும் தெரியாது. சொன்னதை கேட்டுக் கொண்டுபோகவும் முடியவில்லை.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வருடக்கணக்காக நடத்தும் போராட்டம், தையிட்டி விகாரை விடயத்தில் வாராவாரம் இடம்பெறும் மக்கள் போராட்டம், சாவகச்சேரியில் பிரதேச சபை உபதலைவரைஆளுனர் பதவி நீக்கம் செய்ததை கண்டித்து திடீரென ஏற்பாடான போராட்டம் போன்றவைகளை எடுத்துச் சொன்னபோதும் அதனை கட்சிப் பிரமுகர் எவராலும் ஏற்கமுடியவில்லை.

தமிழர் தாயகம் என்று கூறப்படும் வடக்கு கிழக்கில் நாற்பதுக்கும் அதிகமான உள்ளாட்சிச் சபைகள் உள்ளன. இவற்றில் 33 சபைகள் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ளன. தேர்தல் மூலம் பெற்ற வெற்றி இது. யாழ்ப்பாணம் மாநகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை ஆகியவை கூட தமிழரசுக் கட்சியின் மேயர்கள் ஆட்சியிலேயே உள்ளவை. இந்தச் சபைகளின் ஊடாகவாவது, வாரத்துக்கு ஒரு சபை என்ற முறையில் அந்தந்தப் பிரதேசங்களில் மாகாணசபைத் தேர்தலுக்கு மட்டுமன்றி தமிழர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுக்கவும், போராட்டங்களை நடத்தும் நிலைமையில் தமிழரசுக் கட்சி இப்போது இல்லை என்பது மட்டும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

தமிழரசுக் கட்சிக்கு எண்பது வயதாகப் போகிறது. (இதனை ஆங்கிலத்தில் சூப்பர் சீனியர் என்பார்கள்.) தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஐம்பதுஆண்டுகள் முடிவடைந்துவிட்டது. (இதற்காக கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாரிய நிகழ்வில் தமிழரசுக் கட்சி பிரமுகர் எவரையும் காணவில்லை.) வடக்கு கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு எம்.பி. யையாவது மக்கள் தமிழரசுக்கு வழங்கியுள்ளனர்.

ஆனால், ஓர் உள்ளூராட்சி சபை பிரதேசத்தில் ஓர் எழுச்சிப் போராட்டத்தையாயினும் ஏற்பாடு செய்யக்கூடிய பலம் தமிழரசுக் கட்சியிடம் இன்று இல்லையா? அப்படியானால் மாகாணசபைத் தேர்தலை எவ்வாறு இவர்கள் சந்திக்கப் போகிறார்கள்?


தேசிய மக்கள் சக்தி அரசின் தாய்க்கட்சியான ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் வன்னி மாவட்டத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்த ஒரு கருத்து (இதுமுன்னரும் கூறியதுதான்) வலுவானது. அது பின்வருமாறு:

‘வடக்குமக்களுக்கு 13வது திருத்தச் சட்டமும் அதிகாரப் பகிர்வும் அவசியமாக இல்லை. பொருளாதார பிரச்சனைகளுக்கான தீர்வே அவர்களுக்கு அவசியமாகக் காணப்படுகிறது. தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள தமக்கு வாய்ப்பான வசனங்களை பயன்படுத்தி வருகின்றனர்” என்று கூறியதோடு நிறுத்தாது, வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு 13வது திருத்தச் சட்டம் மட்டுமன்றிஅதிகாரப் பகிர்வும் அவசியமாகக் காணப்படவில்லை. அவர்களுக்கு விவசாயத்தை மேற்கொள்ளநீர் வசதியும், அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும்,கல்வியும், நல்ல வைத்தியசாலைகளுமே அவசியமானவை என்று ரில்வின் சில்வா சுட்டியுள்ளார்.

ரில்வின் சில்வாவைஜே.வி.பி.யினர் பொதுச்செயலாளராக மட்டும் பார்ப்பதில்லை. யதார்த்தவாதியாகவே காண்கின்றனர். அவரது கருத்துகள் அர்த்தமுள்ளவை - ஆழமானவை என்று கூறுவர்.

தமிழ் தேசியகட்சிகள் - முக்கியமாக தமிழரசுக் கட்சியிடம் இதற்குள்ளபதில் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





-யதீந்திரா

# ஈழத் தமிழர்களின் அதிகாரத்திற்கான போராட்டம்

வடக்கு ஆளுநர் இரண்டு உள்ளூராட்சி உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்திருக்கும் விடயம்தான் இன்றளவில் பேசுபொருள். கூடவே அவர் குறித்த இரண்டு உள்ளூராட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமையும் நீக்குவதாக வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கின்றார். இந்த விடயம் சாதாரணமானது அல்ல. அதாவது, மாகாண அரசாங்கத்தின் கீழ், ஒரு விடயம் இடம்பெறுவதற்கும், மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டுவரும் நிலையில், இவ்வாறானதொரு விடயம் இடம்பெறுவதற்கும் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு. இதனை வடக்கு மாகாண ஆளுநர் தன்னிச்சையாக செய்திருப்பார் என்று நம்புவது கடினமானது. ஏனெனில் இவ்வாறானதொரு நடவடிக்கையை தன்னிச்சையாக மேற்கொள்வதற்கான அரசியல் பின்புலம் அவருக்கு இருப்பதாக நம்புவதும் கடினமானது.

இது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றன. ஆனால் வெறும் எதிர்ப்புக்களின் வழியாக இவ்வாறான நடவடிக்கைகளை எதிர்கொள்ள முடியாது. ஒரு புறம் அரசியல் ரீதியாகவும், அதே வேளை சட்ட ரீதியாகவும் இந்த விடயம் கையாளப்பட வேண்டும். இது அடிப்படையில் தமிழ் மக்களின் அதிகாரம் கோரும் போராட்டத்தின் ஒரு அங்கம். இந்த அடிப்படையில்தான் இந்த விடயம் புரிந்து கொள்ளப்படவேண்டும்.

ஒரு மக்கள் கூட்டம் கோரும் அதிகாரம் இரண்டு அடிப்படையில்தான் சாத்தியப்பட முடியும். ஒன்று புரட்சியின் மூலமாக - இரண்டு, ஜனநாயக வழிமுறையின் ஊடாக, அதாவது, படிப்படியாக பயணிப்பது - அதன் மூலம் எதிர்பார்க்கும் அதிகாரங்களை பெறுவதற்கு முயற்சிப்பது. ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களால் புரட்சி செய்ய முடியுமா? பதிலை நான் கூறவேண்டியதில்லை. ஈழத் தமிழ் மக்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் அவ்வாறான புரட்சி இலக்கை கொண்டதுதான். ஆயுதப் போராட்டத்தின் மூலம் தென்னிலங்கையை தோற்கடித்து தமிழர்களுக்குத் தேவையானதை, தமிழர்களே பெற்றுக் கொள்வதுதான் ஆயுதப் போராட்டத்தின் இலக்கு. ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. இப்போது எஞ்சியிருப்பது ஒரேயொரு வழிமுறைதான், அதாவது, இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, எதிர்பார்ப்பதை நோக்கி மெது, துவாக முன்னேறுவது. ஆனால் இது இலகுவானதல்ல. பொறுமையும் விடாமுயற்சியும், சூழ்நிலையை புரிந்து கொண்டு செயலாற்றும் திறனும் இதற்கு அவசியம்.

சூழ்நிலையை புரிந்து கொண்டு செயற்படுவது என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு பதில் தேட முற்படும்போது, முதலில் இப்போது எவ்வாறானதொரு சூழ்நிலை, நமக்கு முன்னால் இருக்கின்றது என்னும் கேள்விக்கு பதில் தேட வேண்டும். மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் பல்வேறு சாக்குப் போக்குகளை கூறி இழுத்தடிக்கப்பட்டுவருகின்றது. இந்த நிலையில்தான் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவு செய்யப்பட்ட இரண்டு உள்ளூராட்சி உறுப்பினர்களை நீக்குவதாக அறிவித்திருக்கின்றார். அதேவேளை, மாகாண சபைக்குள் இருப்பதை மத்தியின் கீழ் கொண்டு செல்லும் வேலையையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில், ஈழத் தமிழ் மக்களின் அதிகாரத்திற்கான கோரிக்கை, எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்? இல்லாத ஒன்றை அடிப்படையாகக் கொண்டா - அல்லது, இருப்பதை அடிப்படையாகக் கொண்டா? நாம் விரும்பும் ஒன்றை அடைய வேண்டும் என்று, விரும்புவது தவறானது அல்ல - ஆனால், அதனை வெறும் வார்த்தை ஜாலங்களால், அறிக்கைகளால், சில சந்திப்புக்களின் பின்னரான பிரகடனங்களினால் அடைய முடியுமா? கடந்த பதினேழு ஆண்டுகளாக உங்களுடைய ஆவேச அறிக்கைகள், சந்திப்புக்கள் ஆகியவற்றுக்கு என்ன நடந்தது? ஆகக் குறைந்தது அவற்றை ஒரு சாதாரண அழுத்தங்களாகக் கூட தென்னிலங்கை கருதவில்லையே! ஒப்பீட்டடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியை மட்டும்தான் தென்னிலங்கை சற்று உற்றுநோக்கியிருந்தது. அதுவும் தேர்தல் காலம் என்பதால் தான். ஆனால் அந்த முயற்சியும் கூத்தாடிப் போட்டைத்தாண்டி என்பதாகவே முடிவுற்றது.

அரசியல் என்பது அடிப்படையில் ஒரு பேரம். நாங்கள் இதைத் தருகின்றோம் நீங்கள் அதைத் தாருங்கள் - அல்லது, நாங்கள் இதை விட்டுக் கொடுக்கின்றோம் நீங்கள் அதைத் தாருங்கள் என்பதாக பேசுவதும், முடியுமானவரையில் பெறக் கூடியதை, ஒரு குறிப்பிட்ட சூழலில் பெறுவதும் தான் ஒரு அரசியல் நகர்வின் இலக்காக இருக்க முடியும். ஒன்றை அடை முடியாத முயற்சிகள் அனைத்துமே தோற்றுப் போன முயற்சிகள்தான். அவைகள் கற்றுக் கொள்வதற்கான படிப்பினைகள் மட்டுமே!

அடுத்த கேள்வி, இன்றைய நிலையில், எந்த அடிப்படையில் ஈழத் தமிழர்களால் தென்னிலங்கையுடன் பேச முடியும்? தென்னிலங்கை ஆகக் குறைந்தது தமிழ் மக்களின் பிரச்னை தனித்துவமானது, அதற்கு தனியான பேச்சுவார்த்தை அவசியம் என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலையிலா இருக்கின்றது? யுத்தம் முடிந்த கையோடு, அவ்வாறானதொரு நிலைமை சிறிய அளவில் இருந்தது.

> **இப்போதும் சிலர் சர்வதேச நீதி என்று கூறும் அப்பாவிகளாக இருகின்றனர். காஸாவில், லெபனானில், பல ஆபிரிக்க நாடுகளின் நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கே தீர்வை வழங்க முடியாமல் தடுமாறும், சர்வதேசம் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்து முடிந்த ஒன்றிற்கு எவ்வாறு தீர்வைத் தரப்போகின்றது?**

அந்த அடிப்படையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அங்கும் மாகாண சபையை முன்னிறுத்தாமல், அதற்கப்பால் செல்வது தொடர்பில் சிந்தித்தால், ஒரு கட்டத்திற்கு மேல் நகர முடியவில்லை.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலமாக இருந்த காலத்தில், ஒரு ஆகக் கூடிய தீர்வு தொடர்பில் அவர்கள் சிந்தித்திருக்கலாம் - அந்த அடிப்படையில்தான் சந்திரிகா "பிராந்தியங்களின் ஒன்றியம்" என்னும் நிலைக்குச் சென்றார் ஆனால் அப்போது அதனை பிரதானமாக எதிர்த்தவர் ரணில் விக்கிரமசிங்க. அப்போது சந்திரிகா சிந்தித்ததும் கூட, விடுதலைப் புலிகளின் இராணுவத் தலையீட்டை அடிப்படையாகக் கொண்டு தான். அதனை அவரே பிற்காலத்தில் கூறியுமிருக்கின்றார். புதிய அரசியல் யாப்பு விவகாரத்தில், அப்போது ஆதரித்ததை ஏன் இப்போது ஆதரிக்க முடியாது என்று கேட்ட போது, அப்போது புலிகள் இருந்தார்கள் என்று அவர் பதலளித்திருந்தார். இந்த அடிப்படையில் நோக்கினால் தென்னிலங்கை சுயவிருப்பில் ஒரு போதும் உச்சபட்சமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ் மக்களுக்கு வழக்கப் போவதில்லை. அந்த அதிசயம் ஒரு போதும் இலங்கைத் தீவில் நிகழாது.

இவ்வாறானதொரு அரசியல் சூழலில், தமிழர்களின் அதிகாரத்திற்கான போராட்டத்தின் எதிர்காலம் என்ன? வெளித்தரப்புக்களின் தலையீடுகள் என்பது வெறுமனே உதட்டளவிலான விடயமாக மாறிவிட்டது. இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரையும் சந்திப்பது போன்று, சில தமிழ் பிரதிநிதிகளையும் சந்திக்கின்றனர். ஒரு சிறிய ஆறுதல் இருக்கிறது என்றால், இந்தியா தொடர்ந்தும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தொடர்பில் அதன் ஆர்வத்தை காண்பித்துவருகின்றது என்பது மட்டும்தான். அதுதான் இந்தியாவின் எல்லைக் கோடு. அதற்கப்பால் இந்தியாவிடம் கேட்டால், பாலத்திற்கு கீழே தண்ணீர் நீண்ட காலமாக ஓடிவிட்டது என்னும் பதில் வரும். அந்த பதிலில் தவறில்லை. இந்தியா ஒரு பிராந்திய சக்தி, உலகில் எழுச்சியடைந்துவரும் சக்திகளில் ஒன்று அவ்வாறானதொரு நாடு, ஈழத் தமிழர்களை கருத்தில் கொண்டு அதன் வெளிவிவகார நலன்களை தீர்மானிக்காது தீர்மானிக்கவும் முடியாது.

இவ்வாறானதொரு பின்னணியில் தான், நமது சூழலில், இப்போதும் சிலர் சர்வதேச நீதி என்று கூறும் அப்பாவிகளாக இருகின்றனர். காஸாவில், லெபனானில், பல ஆபிரிக்க நாடுகளின் நடந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கே தீர்வை வழங்க முடியாமல் தடுமாறும், சர்வதேசம் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்து முடிந்த ஒன்றிற்கு எவ்வாறு தீர்வைத் தரப் போகின்றது?

எந்தப் பக்கத்திலிருந்து சிந்தித்தாலும் கூட, இறுதியில் எஞ்சியிருப்பது என்ன? நினைக்குமளவிற்கு ஒன்றுமில்லை. ஆனாலும் ஒன்று இருக்கிறது என்றால், அது மாகாண சபை மட்டும்தான். தமிழ் மக்களின் அதிகாரத்திற்காக போராடப் போகின்றோம் என்றால், அதன் ஆரம்பப் புள்ளி மாகாண சபை ஒன்றுதான். சிலர் எண்ணலாம் மாகாண சபை முறைமை இல்லாதொழிப்படுமானால், அதன் பின்னர் தமிழரின் போராட்டத்திற்கான கதவு திறந்துவிடும். இப்படியான அப்பாவிகள் அரசியல்வாதிகளாகவும், சிவில் சமூகத்தை சேர்ந்தவர்களாகவும் இருப்பதும் கூட, தங்களை மெத்தப் படித்தவர்கள் என்று எண்ணிக் கொண்ட ஒரு சமூகத்தின் சாபக்கேடுதான். மாகாண சபை முறைமை இல்லையென்றால் அதன் பின்னர் அதிகாரப்பகிர்விற்கான அடித்தளமே இருக்காது. இந்தியாவின் ஈடுபாடு முற்றிலும் இல்லாது போய் விடும். வேண்டுமானால் மனித உரிமை தொடர்பான மேற்குல கின் உதட்டளவு ஈடுபாடு இருக்கலாம். ஒரு வேளை தன்னிச்சையாக, இந்தியாவையும் பகைத்துக் கொண்டு தற்போதி ருக்கும் அரசாங்கம் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்குமாயின், அது தமிழர்களுக்கு சாதகமானதாக மாறலாம். ஆனால் அவர்கள் மாகாண சபையை உள்ளுக்குள்ளால் குடையும் வேலையை அல்லவா செய்து கொண்டிருக்கின்றனர். எனவே அதற்கு எதிர்வினையாற்ற வேண் டியது தமிழ் மக்களின் உரிமையல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரண்டு ஜெனரல்களும் நரகமும்



நிலாந்தன்

இப்பொழுது ஆஸ்பத்திரியில் இருக்கும் சுரேஷ் சலே,தான் முன்பு தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் ஒரு "நரகத்தைப் போன்றது" என்று தனது சட்டத்தரணிக்கு கூறியுள்ளார். அந்த நரகத்திற்கு திரும்பிச்செல்ல தான் தயாரில்லை என்றும் கூறியுள்ளார்.சக்தி மிக்க புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளரும் இலங்கையின் படைத்துறைப் பதவி நிலைகளில் இரண்டாம் நிலையில் காணப்படுபவருமாகிய ஒரு மேஜர் ஜெனரல் கூறுகிறார், தன்னை விசாரணை செய்த இடம் நரகத்தைப் போன்றது என்று. ஆனால் இப்படிப்பட்ட நரகங்ளில் தானே தமிழ் அரசியல் கைதிகள் விசாரிக்கப்பட்டார்கள்?


"சுரேஷ் சாலே நிரபராதி என்றால், அவர் மன உறுதியுடன் இருந்து-தன் வழக்கு தொடர்பில் போராட வேண்டும். நாங்கள் அதைத்தான் செய்தோம். நாங்கள் பிரார்த்தனை செய்தோம், உடற்பயிற்சி செய்தோம்,வாசித்தோம்,எங்கள் சட்டத்தரணிகளைச் சந்தித்தோம்,எங்கள் வழக்குகளுக்காகப் போராடினோம்.எங்களைக் கைது செய்த சுரேஷ் சாலேக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை விடவும், எங்கள் நிலைமைகள் மோசமாக இருந்தன என்று அவருக்குத் தெரியும்".... இவ்வாறு தன்னுடைய "எக்ஸ்" தளத்தில் எழுதியிருப்பவர், சிரேஷ்ட சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ். அவர் ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 22 மாதங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டவர்.

சுரேஷ் சலேக்கு அவருடைய நரகம். அதுபோல மற்றொரு ஜெனரலுக்கும் அவருடைய நரகம்.இலங்கைத் தீவின் முதலாவது ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அண்மையில்,ஊடகச் சந்திப்பில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்... "கடற்படை முகாம் ஒன்றில் சுமார் 8 மாதங்கள் ஜன்னல்கள் மற்றும் கதவுகள் அனைத்தும் தடித்த பலகைகளால் முழுமையாக அடைக்கப்பட்ட, வெளிச்சமோ காற்றோ வராத ஒரு சிறிய அறையிலேயே நான் மிருகத்தனமாக அடைத்து வைக்கப்பட்டிருந்தேன். சிறைச்சாலைகள், சித்திரவதைக் கூடங்கள், தடுப்புக்காவல் முகாம்களில் அடைக்கப்பட்டு இருப்பவர்களின் வேதனை,அனுபவங்கள் என்ன என்பது குறித்த முழுமையான அறிவும் அனுபவமும் இந்த சுரேஷ் சலேவுக்கு மிக நன்றாகவே உண்டு. இந்த சுரேஷ் சலே மற்றும் கபில ஹெந்தவிதாரண போன்ற பாதுகாப்புப் பிரிவு உயர் அதிகாரிகளின் முறையற்ற ஆலோசனைகளையும், நச்சு வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டே கோட்டாபய ராஜபக்ஷ அன்று என்னைச் சிறையிலடைத்துப் பழிவாங்கினார். ராணுவக் காவலில் கைது செய்யப்பட்ட அந்தத் துயரமான தினமன்று, எனது மனைவியைக் கூடக் காலை 4மணிவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கொடூரமான முறையில் தடுத்துவைத்து, கடுமையான விசாரணைக்கு உட்படுத்தினர்."

இலங்கைத் தீவின் ஒரேயொரு ஃபீல்ட் மார்ஷலுக்கு,ஒரு ஜெனரலுக்கு, முன்னாள் தளபதிக்கு இதுதான் நடந்தது என்றால்,தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்திருக்கும்? சக்திமிக்க ஜெனரல்களாக இருந்த இருவரும் தாம் விசாரணை செய்யப்பட்ட விதம் தொடர்பாக கூறியிருப்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அது நரகம்தான் என்று தெரிகிறது.இந்த இரண்டு பேர்களும் இருவேறு அரசாங்கங்களின் காலத்தில் சிறை வைக்கப்பட்டவர்கள்.இரண்டு பேர்களையும் விசாரித்த விசாரணைக் கட்டமைப்புகள் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை.

ஆனால் விசாரணைகள் எந்த அரசாங்கத்தின் காலத்தில் நடந்தவை? யார் அப்பொழுது புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரியாக இருந்தவர்? என்பவையெல்லாம் இங்கு விவகாரம் அல்ல. விவகாரம் என்னவென்றால், அந்த விசாரணைக் கட்டமைப்பு கைதிகளை விசாரிக்கும் போது அது நரகமாக இருந்ததா? இல்லையா ? என்பதுதான்.





இவை இலங்கைத் தீவின் அரசியல் பழிவாங்கல் கலாச்சாரத்தை மட்டும் பிரதிபலிக்கவில்லை.இலங்கைத் தீவின் உள்நாட்டு விசாரணை பாரம்பரியத்தின் உண்மை நிலைமையை,அது ஒரு நரகத்தைப் போன்று இருந்ததை வெளியே கொண்டு வருகின்றன.கடந்த சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலான விசாரணைப் பாரம்பரியம் இது.தமிழ்மக்கள் ஏன் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையைக் கேட்கிறார்கள் என்பதற்கான காரணங்கள் அதில் உண்டு.

இப்பொழுது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இதயமாகக் காணப்படும் ஜேவிபியின் தோழர்கள் இரண்டு தடவைகள் அந்த நரகத்துக்குள் விசாரிக்கப்பட்டவர்கள்தான்.

அந்த நரகத்தால் சப்பித் துப்பட்டவர்கள் ஈவிரக்கம் இன்றி வேட்டையாடப்பட்டவர்கள்கொன்று நதிகளில் வீசப்பட்டவர்கள்அரைகுறை உயிரோடு தெருக்களில் டயர்கள் போட்டுக் கொளுத்தப்பட்டவர்கள்கைது செய்யப்பட்ட பின் என்ன ஆனார்கள் என்று யாருக்குமே தெரியாமல் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். ஆகியோரின் மத்தியில் இருந்து எழுச்சி பெற்றதுதான் இப்போது நாட்டை ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

ஆனால் இப்படிப்பட்ட இரண்டு கொடுமையான அனுபவங்களைக் கடந்து வந்த ஓர் இயக்கத்தால் வழிநடத்தப்படும் அரசாங்கமானது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவிடத் தயாரில்லை. கடந்த 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசுத் தலைவர் சொன்னார்,பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இந்த ஆண்டு முடிவுக்குள் நீக்கி விடுவோம் என்று.ஆனால் அவர்கள் நீக்கப்போவது பழைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை.அதற்குப் பதிலாக புதியது ஒன்று வரப்போகிறது.அது பழையதை விடக் கொடுமையானது என்று தமிழ் அரசியல்வாதிகளும் நாட்டில் உள்ள பெரும்பாலான மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கூறுகிறார்கள். அதாவது அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிக்கப் போகிறது என்று தான் கூறவேண்டும்.

அதே சமயம் இப்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒரு கருவியாகக் கையாண்டு தமிழ்,முஸ்லிம்,சிங்களக் கைதிகளை விசாரணை செய்த நாட்டின் முன்னாள் புலனாய்வுத்துறைப் பணிப்பாளராகிய சுரேஷ் சலே,அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றக் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக அவருடைய மகன் சில கிழமைகளுக்கு முன்பு ஊடகங்களுக்குத் தெரிவித்தார். அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்ய வேண்டாம் என்று கேட்டு கோத்தாபய ராஜபக்ச நீதி மன்றத்தை நாடினார்.

மேற்சொன்ன இரண்டு ஜெனரல்களும் தாங்கள் விசாரணைக் கைதிகளாய் இருந்த காலகட்டத்தில் அனுபவித்த நரகத்தைப் பற்றிக் கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் இரண்டு பேரும் குறிப்பாக சரத் பொன்சேகா உருவாக்கிய நரகம் ஒன்று இறுதிக் கட்டப் போரில், வன்னி கிழக்கில் இருந்தது. இறுதிக்கட்டப் போரின் இறுதி மாதங்களில்,மாத்தளன் கடற்கரைக்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் அந்த அமைப்பின் தென்னாசியப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியும் வந்திருந்தார்.கப்பல் தரித்து நின்ற குறுகிய காலப்பகுதிக்குள் அவர் வன்னி கிழக்கைப் பார்வையிட்டார்.அதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது "தனது பதவிக்காலத்தில் தான் பார்த்த நரகங்களில் மிக மோசமான நரகம் அது" என்று வர்ணித்திருந்தார்.

அந்த நரகத்துக்கு மேற்சொன்ன இரண்டு ஜெனரல்களும் எதோ ஒரு விகிதமளவுக்குப் பொறுப்பு.அதனால்தான் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் நரகத்தை உற்பத்தி செய்த ஜெனரல்களுக்கு நரகம் திருப்பிக் கிடைத்தது என்ற பொருளில், கர்மா அவர்களை விடாமல் துரத்துகிறது என்று கதைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அரசியலில் பாவம், புண்ணியம், கர்மா என்பவையெல்லாம் கிடையாது.

சுரேஷ் சாலே ஒரு கத்தோலிக்கர். கோட்டாபய ஒரு பௌத்தர்.இரண்டு பேரையும் அவர்கள் செய்த பாவம் துரத்துகிறது என்று ஒரு பகுதி தமிழ் மக்கள் கதைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அரசியலில் பாவம், புண்ணியம், கர்மாவெல்லாம் கிடையாது.சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தென்னாபிரிக்காவில் கொன்றொழிக்கப்பட்ட "சூலு" இன மக்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை.கடந்த நூற்றாண்டில், கிழக்கு ஐரோப்பியப் பிராந்தியத்தில், இன அழிப்பின் மூலம் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட செச்னியர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. பாலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. காஷ்மீரியர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.நைஜீரியாவின் பியாஃப்ரா மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்த லட்சணத்தில் இலங்கைத்தீவில் கர்மா ராஜபக்சக்களையும் சுரேஷ் சலேயையும் துரத்துவதாக நம்புவது விஞ்ஞானபூர்வமற்ற ஒரு கற்பனை.


ஆனாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கண்டு சுரேஷ் சலேயும் கோத்தாபயவும் பயப்படுகிறார்கள் என்பது இலங்கைத் தீவின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் மனிதாபிமானமற்ற பரிமாணத்தை வெளிக்கொண்டுவர தமிழ் மக்களுக்கு உதவும்.

ஆனால்,பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 1980களின் பிற்பகுதியில் கொடூரமாக வதைக்கப்பட்ட,விசாரிக்கப்பட்ட ஓர் இயக்கத்தால் வழிநடத்தப்படும் இந்த அரசாங்கம், அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாமல் செய்யப்போவதாக கூறிக்கொண்டு அதை வேறு ஒரு வடிவத்தில் புதுப்பிக்க முயற்சிக்கிறது. புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தில், எது பயங்கரவாதம்? என்ற வரைவிலக்கணம் தெளிவாக இல்லை என்று ஏற்கனவே தமிழ் சட்டச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒன்று இல்லாமல்,அதாவது பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுகிறோம் என்ற ஒரு கூட்டு உளவியலை தொடர்ந்தும் பேணாமல் இந்த நாட்டை ஆள முடியாது என்று அதே பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஓர் இயக்கத்தை அடித்தளமாகக் கொண்டுள்ள இப்போதுள்ள அரசாங்கமும் நம்புகின்றது என்பதுதான் இலங்கை தீவின் தீராத துயரம்.

> "பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒன்று இல்லாமல், அதாவது பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுகிறோம் என்ற ஒரு கூட்டு உளவியலை தொடர்ந்தும் பேணாமல் இந்த நாட்டை ஆள முடியாது என்று அதே பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஓர் இயக்கத்தை அடித்தளமாகக் கொண்டுள்ள இப்போதுள்ள அரசாங்கமும் நம்புகின்றது என்பதுதான் இலங்கை தீவின் தீராத துயரம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திரையுலகின் பன்முக வித்தகர், ‘திரைக்கதை மன்னன்’ கே.பாக்யராஜ்



திரைக்கதை மன்னன் என்று என்று பெயர் எடுத்த இயக்குனர் கே.பாக்யராஜ் மாரடைப்பால் திடீரென காலமானார். அவரது மறைவு திரையுலகினர், ரசிகர்கள் இடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இயக்குனர், நடிகர், இசையமைப்பாளர், வசனகர்த்தா, திரைக்கதை மன்னன் என திரையுலகில் அவர் கடந்து வந்த பாதையை சற்றே திரும்பி பார்ப்போம்.



**திரைப்பயணம்**

1953ம் ஆண்டு ஜனவரி 7ம் தேதி ஈரோடு மாவட்டத்தில் பிறந்தவர் பாக்யராஜ். இவரது தந்தை பெயர் கிருஷ்ணசாமி நாயுடு. தாயார் அமராவதி அம்மாள். சிறு வயதிலிருந்தே சினிமா மீது கொண்ட தீரா காதல் கே பாக்யராஜை தன் சொந்த ஊரை விட்டு சென்னைக்கு இழுத்து வந்தது. பியூசி படிப்பு வரை எட்டிய கே. பாக்யராஜ், இயக்குநர் ஜி ராமகிருஷ்ணனிடம் உதவி இயக்குநராக தனது முதல் திரைப்படப்பணியை ஆரம்பித்தார்.

**குருநாதர் பாரதிராஜா**

அதன்பின் 1977ல் தனது குருநாதரான பாரதிராஜாவின் முதல் படைப்பான ‘16 வயதினிலே’ திரைப்படத்தில் உதவியாளராகவும் ஒரு சிறு வேடமும் நடித்தார். பாரதிராஜாவின் அடுத்த படைப்பான ‘கிழக்கே போகும் ரயில்’ திரைப்படத்தில் உதவி இயக்குநர் அந்தஸ்தையும் ஒரு சிறு கதாபாத்திரமும் ஏற்றும் நடித்திருந்தார். தொடர்ந்து ‘சிகப்பு ரோஜாக்கள்’ படத்திலும் இவருக்கு ஒரு சிறு வேடம் தந்த பாரதிராஜா அந்த படத்தின் வசனங்களையும் இவரை வைத்தே எழுத வைத்திருந்தார். படம் மிகப்பெரிய வெற்றி.

**ஹீரோ, இயக்குனர் அவதாரம்**

தனது அடுத்த படமான ‘புதிய வார்ப்புகள்’ திரைப்படத்தில் பாக்யராஜை ஹீரோவாக்கி அழகு பார்த்த பாரதிராஜா படத்தின் வசனங்களையும் அவரையே எழுத வைத்தார். இப்படி அடுத்தடுத்த முன்னேற்றங்களின் தொடர்ச்சிதான் இவர் இயக்குநர் அவதாரம் எடுத்த ‘சுவரில்லாத சித்திரங்கள்’.

இதுவே இவர் இயக்கிய முதல் திரைப்படம். இதில் கதாநாயகனாக நடிகர் சுதாகரை நடிக்க வைத்து, இவர் குணசித்திர வேடமேற்று நடித்தார். அதன் பின் இவர் கதாநாயகனாவும், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் மற்றும் தயாரிப்பு என்று அனைத்தையும் ஏற்று வெளிவந்த திரைப்படம் ‘ஒரு கை ஓசை’. இதில் வாய் பேச முடியாத ஒரு கதாபாத்திரத்தில் அருமையாக தன் நடிப்பை வெளிப்படுத்தினார். ஆனால் படம் பெரிய அளவில் பேசப்படவில்லை.

**திருப்புமுனை தந்த மௌன கீதங்கள்**

இயக்குனராக பாக்யராஜிற்கு திருப்புமுனை தந்த படம் ‘மௌன கீதங்கள்’. இத்திரைப் படத்திற்கு பிறகு இவர் இயக்கிய அத்தனை படங்களும் இவரின் பெயர் சொல்லும் படங்களாகவும் இவருக்கென்று ஒரு தனி முத்திரையை தந்த படங்களாகவும் அமைந்ததோடு மட்டுமின்றி அனைத்தும் வெற்றிப் படங்களாகவும் அமைந்தது. ராஜேஷ் ஹீரோவாக நடித்த ‘கன்னிப்பருவத்திலே’ படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதி அப்படத்தில் வில்லன் வேடத்திலும் நடித்தார்.

**முந்தானை முடிச்சு**

ஏசி திருலோகசந்தர், எஸ் பி முத்துராமன் என்று சில ஆஸ்தான இயக்குநர்களையே வைத்து படம் எடுத்துக் கொண்டிருந்த ஏவிஎம் நிறுவனம் முதல் முறையாக கே. பாக்யராஜை வைத்து தயாரித்த திரைப்படம் தான் ‘முந்தானை முடிச்சு’ மிகப் பெரிய வெற்றியை ஈட்டித் தந்த திரைப்படம். இந்த படம் தந்த வெற்றியால் ஒரு விழா நிகழ்ச்சியில் கே. பாக்யராஜை தனது கலை வாரிசாக எம்ஜிஆர் அறிவித்தது அன்றைய காலகட்டங்களில் பரபரப்பாக பேசப்பட்ட ஒன்றாகும்.

**இரு ஜாம்பவான்களை இயக்கிய பெருமை**

நடிகராகவும், இயக்குநராகவும், கதாசிரியராகவும் ஏறக்குறைய 60க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் மக்களை மகிழ்வித்த ஒரு மாபெரும் கலைஞன் பாக்யராஜ். சில படங்களுக்கு இசையும் அமைத்திருக்கிறார் என்பது இவருக்கு கிடைத்த கூடுதல் அங்கீகாரம். நடிகர் திலகம் சிவாஜியையும், தனது குருவான பாரதிராஜாவையும் தனது கதை திரைக்கதை வசனம் இயக்கத்தில் நடிக்க வைத்து தனது நீண்ட நாள் ஆசையையும் ‘தாவணிக் கனவுகள்’ திரைப்படம் மூலம் தீர்த்துக் கொண்டார்.

**இயக்கிய முக்கிய படங்கள்**

சுவரில்லாத சித்திரங்கள், ஒரு கை ஓசை, மௌன கீதங்கள், இன்று போய் நாளை வா, அந்த 7 நாட்கள், தூறல் நின்னு போச்சு, பொய் சாட்சி, டார்லிங் டார்லிங் டார்லிங், முந்தானை முடிச்சு, தாவணிக் கனவுகள், சின்ன வீடு, எங்க சின்ன ராசா, ஆராரோ ஆரிரரோ, பவுனு பவுனுதான், ராசுக்குட்டி, அம்மா வந்தாச்சு, சுந்தர காண்டம், வீட்ல விஷேசங்க, சொக்கத்தங்கம். பாக்யராஜ் தான் இயக்கிய அனேக படங்களில் அவரே ஹீரோவாகவும் நடித்தார்.

**பிறமொழி**

ஒரு கைதியின் டைரி திரைப்படத்தின் ஹிந்தி பதிப்பில் அமிதாப் பச்சன் கதானாயகனாக நடிக்க அப்படத்தை இயக்குகின்ற பொறுப்பை பாக்யராஜ் ஏற்றார். ஆக்ரி ராஸ்தா என்ற பெயரில் வெளியான அந்தப் படம்தான் பாக்யாராஜ் இயக்கிய முதல் ஹிந்திப் படம். பாக்யராஜின் எண்ணற்ற வெற்றிப் படங்கள் ஹிந்தி மொழியில் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. தெலுங்கு, கன்னடம், ஒரியா என்று பல மொழிகளில் இவரது கதைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**எழுத்தாளர்**

எழுத்துலகிலும் முத்திரையைப் பதித்த இவர் இருபது ஆண்டுகளாக பாக்யா என்ற வார இதழின் ஆசிரியராக இருந்து வருகிறார். வாங்க சினிமாவைப் பற்றி பேசலாம் உள்ளிட்ட சில புத்தகங்களையும் எழுதி உள்ளார்.

**விருதுகள்**

புதிய வார்ப்புகள், தாய்க்குலமே தாய்க்குலமே ஆகிய படங்களுக்காக தமிழக அரசின் விருது பெற்ற இவர், ‘ஒரு கை ஓசை’ படத்தில் சிறந்த நடிப்பிற்காக தமிழக அரசின் விருதினைப் பெற்றார். 1983ல் சிறந்த நடிகருக்கான பிலிம் பேர் விருது ‘முந்தானை முடிச்சு’ திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது.

# ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்: ஹோர்மூஸ் நீரிணையில் என்ன நடக்கிறது?

ஹோர்மூஸ் நீரிணையில் சரக்கு கப்பல் ஒன்றின் மீதான தாக்குதலுக்குப் பிறகு ஈரான் அமைதி ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார். இதனைத் தொடர்ந்து ஈரானில் உள்ள இலக்குகளை அமெரிக்க ராணுவம் தாக்கியுள்ளது.

கடந்த வியாழன் சரக்கு கப்பல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் யாரும் உயிரிழக்கவில்லை. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பிராந்தியத்தில் சிக்கித் தவிக்கும் நூற்றுக்கணக்கான மாலுமிகளை மீட்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்குப் பதிலடியாக ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் சேமிப்பு நிலைகள் மற்றும் கடற்கரை ரேடார் நிலைகளை வெள்ளிக்கிழமை தாக்கியதாக அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளை மையம் (சென்ட்காம்) தெரிவித்தது. ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை அமெரிக்காவையும் இஸ்ரேலையும் குற்றம் சாட்டியிருந்தது.

இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு சற்று முன்பு, ஈரானை அமெரிக்கா திருப்பித் தாக்குமா என்கிற கேள்விக்குப் பதிலளித்த ட்ரம்ப் “நீங்கள் பார்ப்பீர்கள்” என்று மட்டும் தெரிவித்திருந்தார்.

இந்த நடவடிக்கை ட்ரோன் தாக்குதலுக்கான “வலுவான பதிலடி” என்று சென்ட்காம் கூறியிருந்தது.

“வணிக கப்பல்களுக்கு எதிரான ஈரானிய படைகளின் தேவையற்ற தாக்குதல் அமைதி ஒப்பந்தத்தை தெளிவாக மீறுகிறது,” என சென்ட்காமின் அறிக்கை கூறுகிறது.

“முக்கியமான சர்வதேச வர்த்தக வழித்தடத்தில் வணிகம் அதிகரித்து வரும் சூழலில் ஈரானின் ஆபத்தான அணுகுமுறை கப்பல் போக்குவரத்துக்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்துகிறது,” என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஹோர்மூஸ் நீரிணையைக் கடந்து வரும் வணிக கப்பல்களுக்கு பாதுகாப்பான பயணத்திற்கான ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவை அமெரிக்க ராணுவம் வழங்கும் என்றும் சென்ட்காம் கூறியுள்ளது.



இந்தச் சூழலில் அமெரிக்க தாக்குதல்கள் தனிப்பட ஒன்றா அல்லது பெரிய, தொடர் பதிலடியின் ஓர் அங்கமா என்பதில் தெளிவில்லை.

இது தொடர்பாக இஸ்லாமிய புரட்சிகர காவல்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஒப்பந்தங்களை முறிக்கும் அமெரிக்க அரசு எப்போதும் போலவே, ஹோர்மூஸ் நீரிணையில் அனுமதிக்கப்படாத வழித்தடத்தில் ஒரு கப்பல் சென்ற விவகாரத்தை வைத்துக் கொண்டு தனது உத்தரவாதங்களை மீறி ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கரையில் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது,” எனத் தெரிவித்துள்ளது.

மேலும் தாக்குதல்கள் தொடர்ந்தால் எங்களின் பதிலடி இதைவிடவும் தீவிரமாக இருக்கும் கூறியுள்ளது.

“ஜியோனிச ஆட்சி” என இஸ்ரேலைக் குறிப்பிட்டு, லெபனானில் போர் நிறுத்தத்தை மீறியதாகவும் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை குற்றம் சாட்டியுள்ளது.

வெள்ளிக்கிழமை வாஷிங்டனில் அமைதித் திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் இஸ்ரேலும் லெபனானும் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து இந்த நிகழ்வுகள் அரங்கேறியுள்ளன. போர் நிறுத்தம் அமலில் இருந்தாலும் தெற்கு லெபனானில் இஸ்ரேல் ராணுவம் மற்றும் ஈரான் ஆதரவு பெற்ற ஹெஸ்பொலா இடையே சண்டை நடந்துள்ளது.

பிப்ரவரி மாதத்தின் இறுதியில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடங்கிய பிறகு ஹோர்மூஸ் நீரிணை ஈரானால் மூடப்பட்டது.

எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்துக்கான இந்த முக்கியமான கடல் வழித்தடம் மூடப்பட்டதைத் தொடர்ந்து உலகளவில் எண்ணெய் விலை உயர்ந்தது. உரங்கள் உள்ளிட்ட இதர முக்கியப் பொருட்களின் போக்குவரத்தும் தடைபட்டது.

ஜூன் 17-ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட 14 அம்ச ஒப்பந்தத்தின்படி மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்கா மற்றும் ஈரான் ஒப்புக்கொண்டன. வணிக கப்பல்கள் எந்த விதமான கட்டணமும் இல்லாமல் 60 நாட்களுக்குப் பாதுகாப்பாகச் செல்வதற்கு தனது சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அந்த ஒப்பந்தம் ஈரானைக் கேட்டுக் கொண்டிருந்தது.

அமெரிக்காவின் பதில் தாக்குதல்களைத் தொடர்ந்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், “ஒப்பந்தம் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பதில் ஈரானுக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கிறது என்றால் அவர்கள் செல்போனை எடுக்கலாம். ஆனால் வன்முறை என்பது வன்முறையால் மட்டுமே எதிர்கொள்ளப்படும்.” எனத் தெரிவித்திருந்தார்.

ஈரான் நாடாளுமன்றத்தின் தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் தலைவரான இப்ராஹிம் அஸிஸி சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “அமெரிக்கா மீண்டுமொரு முறை பேச்சுவார்த்தைகளுக்கு நடுவே ஈரானைத் தாக்கியுள்ளது.” என்றார்.

மேலும் அந்தப் பதிவில், “இத்தகைய கட்டுப்பாடற்ற போர் நிறுத்த மீறல் என்பது எப்போதும் போலவே அவர்கள் வருத்தப்படுவதற்கே வழிவகுக்கும். பழி சொல்லும் விளையாட்டு இனியும் எடுபடாது.” என்று குறிப்பிட்டிருந்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரிட்டனில் கெய்ர் ஸ்டார்மர் ராஜினாமா:
# 20 ஆண்டு பிரதமர்களின் அரசியல் நெருக்கடி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பிரிட்டிஷ் அரசியலில் மீண்டும் ஒரு முறை பெரும் அரசியல் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. பிரதமரும் தொழிற்கட்சியின் தலைவருமான கெய்ர் ஸ்டார்மர் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருப்பது, ஒரு தனிப்பட்ட அரசியல் நிகழ்வாக மட்டுமல்லாமல், கடந்த இருபது ஆண்டுகளாக பிரிட்டனில் உருவாகி வந்த அரசியல் நிலையற்ற தன்மையின் தொடர்ச்சியாகவும் பார்க்கப்படுகிறது.

**பிரிட்டிஷ் அரசியலில் திருப்புமுனை:**

ஒரு காலத்தில் உலகின் மிகவும் நிலையான நாடாளுமன்ற ஜனநாயகங்களில் ஒன்றாக கருதப்பட்ட பிரிட்டன், இன்று அடிக்கடி பிரதமர்கள் மாறும் அரசியல் சூழலுக்குள் நுழைந்துள்ளது. 2006 முதல் 2026 வரை பதவி வகித்த பிரதமர்களின் வரலாற்றைப் பார்த்தாலே, பிரிட்டிஷ் அரசியலின் பரிணாமத்தையும் அதன் சவால்களையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

1997 முதல் 2007 வரை பதவி வகித்த டோனி பிளேயர், "நியூ லேபர்" அரசியலின் முகமாகக் கருதப்பட்டார். பொருளாதார வளர்ச்சி, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் சீர்திருத்தங்களை முன்னெடுத்த அவர், பிரிட்டனை நவீன அரசியல் பாதைக்கு அழைத்துச் சென்றார். எனினும், ஈராக் போரில் பிரிட்டனை ஈடுபடுத்திய முடிவு அவரது அரசியல் மரபின் மீது நிரந்தர சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவரைத் தொடர்ந்து வந்த கோர்டன் பிரவுன், 2008 உலகப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டார். வங்கிகளை மீட்கும் நடவடிக்கைகள் மூலம் உலகளவில் பாராட்டைப் பெற்றாலும், பொருளாதார சவால்கள் காரணமாக தொழிற்கட்சி 2010 தேர்தலில் தோல்வியடைந்தது. 2010 ஆம் ஆண்டில் டேவிட் கேமரன் தலைமையிலான கன்சர்வேட்டிவ் அரசு ஆட்சிக்கு வந்தது. அரச செலவுகளைக் குறைக்கும் கொள்கை அவரது ஆட்சியின் அடையாளமாக இருந்தது. ஆனால் அவரது அரசியல் வாழ்க்கையை நிர்ணயித்த மிகப்பெரிய முடிவு, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெக்சிட் பொதுவாக்கெடுப்பாகும். பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும் என்ற முடிவு வந்தவுடன், அவர் தனது பதவியை விட்டு விலகினார்.

அவரைத் தொடர்ந்து தெரசா மே பிரெக்சிட் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயன்றார். ஆனால் நாடாளுமன்ற ஆதரவைப் பெற முடியாமல் தொடர்ந்து தோல்வியடைந்ததால், அவரும் பத்வி விலக நேரிட்டது. 2019 இல் போரிஸ் ஜோன்சன் பிரதமராகி பிரெக்சிட்டை நடைமுறைப் படுத்தினார். ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்ற அவர், பின்னர் கோவிட் 19 கால நிர்வாகம் மற்றும் 'பார்ட்டிகேட்' சர்ச்சையால் தனது அரசியல் செல்வாக்கை இழந்தார்.

அவருக்குப் பிறகு வந்த லிஸ் ட்ரஸ், வெறும் 45 நாட்களே பதவியில் நீடித்தார். அவரது பொருளாதாரத் திட்டங்கள் நிதிச் சந்தைகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதால், பிரிட்டன் அரசியல் வரலாற்றிலேயே மிகக் குறுகிய காலம் பதவி வகித்த பிரதமராக மாறினார். 2022 முதல் 2024 வரை ரிஷி சுனக் நாட்டை வழிநடத்தினார். பொருளாதார நிலைத்தன்மையை மீட்டெடுக்க முயன்றாலும், வாழ்க்கைச் செலவு உயர்வு, குடியேற்றக் கொள்கை சர்ச்சைகள் மற்றும் நீண்டகால கன்சர்வேட்டிவ் ஆட்சியின் மீதான மக்கள் சோர்வு காரணமாக அவரது கட்சி ஆதரவை இழந்தது.

**கெய்ர் ஸ்டார்மர் ராஜினாமா:**

2024 தேர்தலில் தொழிற்கட்சியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வந்த கெய்ர் ஸ்டார்மர், அரசியல் மாற்றத்தின் அடையாளமாகக் கருதப்பட்டார். 14 ஆண்டுகளாக நீடித்த கன்சர்வேட்டிவ் ஆட்சிக்கு முடிவு கட்டிய அவர், பிரிட்டனில் நிலைத்தன்மையையும் பொருளாதார மீட்சியையும் கொண்டு வருவார் என்ற எதிர்பார்ப்பு உருவானது. ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் அவரது அரசாங்கம் பல சவால்களை எதிர்கொண்டது. வாழ்க்கைச் செலவு உயர்வு, பொருளாதார மந்தநிலை, குடியேற்ற விவாதங்கள், தேசிய சுகாதார சேவையின் சிக்கல்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவு ஆகியவை அவரது தலைமைத்துவத்தின் மீது அழுத்தத்தை அதிகரித்தன. கட்சிக்குள்ளேயே தலைமை மாற்றம் குறித்து பேசப்படத் தொடங்கியது.



> கடந்த இருபது ஆண்டுகளின் பிரித்தானிய வரலாறு ஒரு தெளிவான உண்மையை வெளிப்படுத்துகிறது. இலண்டன் அரசியல் இன்று முன்பை விட மிகவும் நிலையற்றதாக மாறியுள்ளது. உலகப் பொருளரதார நெருக்கடி, பிரெக்சிட், கோவிட் 19, குடியேற்ற விவாதங்கள் மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவை அரசியல் தலைவர்களின் நிலைத்தன்மையை தொடர்ந்து சவாலுக்கு உட்படுத்தியுள்ளன.



இந்த சூழ்நிலையில் அவரது ராஜினாமா, பிரிட்டிஷ் அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது. தொழிற்கட்சியின் அடுத்த தலைவராக ஆண்டி பேர்ன்ஹாம் போன்ற பெயர்கள் பேசப்படுகின்றன. புதிய தலைவர் யார் என்பது மட்டுமல்ல, அவர் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக சவால்களை எவ்வாறு கையாளப் போகிறார் என்பதுதான் முக்கியமான கேள்வியாக உள்ளது.


கடந்த இருபது ஆண்டுகளின் வரலாறு ஒரு தெளிவான உண்மையை வெளிப்படுத்துகிறது. பிரிட்டன் அரசியல் இன்று முன்பை விட மிகவும் நிலையற்றதாக மாறியுள்ளது. உலகப் பொருளாதார நெருக்கடி, பிரெக்சிட், கோவிட் 19, குடியேற்ற விவாதங்கள் மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவை அரசியல் தலைவர்களின் நிலைத்தன்மையை தொடர்ந்து சவாலுக்கு உட்படுத்தியுள்ளன.

எனவே, கெய்ர் ஸ்டார்மரின் ராஜினாமா என்பது ஒரு பிரதமரின் அரசியல் முடிவு மட்டுமல்ல. அது கடந்த இருபது ஆண்டுகளாக உருவாகிக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசியலின் ஆழமான மாற்றங்களின் மற்றொரு வெளிப்பாடாகும். அடுத்த பிரதமர் யார் என்பதைக் காட்டிலும், பிரிட்டன் எந்த அரசியல் திசையில் பயணிக்கப் போகிறது என்பதுதான் இன்று உலக அரசியல் கவனத்தின் மையமாக உள்ளது.

**பிரிட்டன் எந்த அரசியல் திசையில்?**

உலக அரசியலில் நீண்ட காலமாக நிலைத்தன்மை மற்றும் ஜனநாயக பாரம்பரியத்தின் அடையாளமாகக் கருதப்பட்ட பிரிட்டன், இன்று குறிப்பிடத்தக்க அரசியல் மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. ஒரு காலத்தில் கன்சர்வேட்டிவ் மற்றும் லேபர் ஆகிய இரண்டு பெரிய கட்சிகளின் ஆதிக்கத்தில் இயங்கிய அரசியல் அமைப்பு, தற்போது பல புதிய சக்திகளின் எழுச்சியால் மாற்றமடைந்து வருகிறது. 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெக்சிட் வாக்கெடுப்பு பிரிட்டிஷ் அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியதன் மூலம் தேசிய இறையாண்மை மற்றும் எல்லைக் கட்டுப்பாடு போன்ற கேள்விகள் அரசியல் விவாதங்களின் மையமாக மாறின. ஆனால் பிரெக்சிட் வாக்குறுதிகள் அனைத்தும் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்ற உணர்வு பல தரப்பினரிடையே உருவாகியுள்ளது.

2024 பொதுத் தேர்தலில் லேபர் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சிக்கு வந்தாலும், அது பாரம்பரிய சமூக ஜனநாயக அரசியலுக்கான முழுமையான திரும்புகையை குறிக்கவில்லை. மாறாக, பொருளாதார பொறுப்புணர்வு, கட்டுப்படுத்தப்பட்ட அரச செலவுகள் மற்றும் மத்திய நிலைப்பாட்டை முன்னிறுத்தும் அணுகுமுறையையே லேபர் தலைமையகம் கடைப்பிடித்து வருகிறது. இதனால் இடதுசாரி வாக்காளர்களின் ஒரு பகுதியும் அதிருப்தியடைந்துள்ளனர்.



மறுபுறம், வலதுசாரி தேசியவாத அரசியல் புதிய உயிர் பெற்று வருகிறது. குறிப்பாக குடியேற்றம், தேசிய அடையாளம் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற பிரச்சினைகளை முன்னிறுத்தும் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் அதிக ஆதரவைப் பெறத் தொடங்கியுள்ளன. இந்தப் போக்கு ஐரோப்பாவின் பல நாடுகளில் காணப்படும் அரசியல் மாற்றங்களுடன் ஒத்துப்போகிறது.

பிரிட்டனின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று குடியேற்றக் கொள்கையாகும். சட்டவிரோத குடியேற்றம், அகதிகள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து அரசியல் மையப்புள்ளியாக உள்ளன. இந்த விவகாரத்தில் பாரம்பரிய கட்சிகள் மக்களின் கவலைகளுக்கு போதுமான பதில் அளிக்கவில்லை என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது.

அதேநேரம், பொருளாதார சவால்களும் அரசியல் மாற்றத்திற்கு முக்கிய காரணமாக உள்ளன. உயர்ந்து வரும் வீட்டு விலைகள், வாழ்க்கைச் செலவு நெருக்கடி, தேசிய சுகாதார சேவையின் சுமைகள் மற்றும் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவை அரசியல் அதிருப்தியை அதிகரித்துள்ளன. இதனால் பழைய அரசியல் அமைப்புகள் மீது மக்களின் நம்பிக்கை குறைந்து வருகிறது.

ஸ்கொட்லாந்தின் சுயாட்சி கோரிக்கையும் பிரிட்டனின் எதிர்கால அரசியல் அமைப்பை பாதிக்கக்கூடிய முக்கிய காரணியாகவே தொடர்கிறது. ஸ்கொட்லாந்து தேசியவாதத்தின் வளர்ச்சி, ஐக்கிய இராச்சியத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றிய கேள்விகளை மீண்டும் எழுப்பியுள்ளது.

எனவே, பிரிட்டன் தற்போது மத்திய அரசியல் மற்றும் தேசியவாத அரசியல் ஆகிய இரு திசைகளுக்கிடையில் போட்டியிடும் ஒரு மாற்றக் கட்டத்தில் உள்ளது என்று கூறலாம். லேபர் கட்சி மத்திய நிலைப்பாட்டை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறது. அதேவேளை வலதுசாரி தேசியவாத சக்திகள் மக்களின் அதிருப்தியை அரசியல் ஆதரவாக மாற்ற முயல்கின்றன. இன்றைய சூழலில் பிரிட்டன் முழுமையாக இடதுசாரி அல்லது வலதுசாரி திசையில் நகர்கிறது என்று கூற முடியாது. மாறாக, பொருளாதார பாதுகாப்பு, தேசிய அடையாளம், குடியேற்றக் கட்டுப்பாடு மற்றும் அரசியல் அமைப்பின் மீதான நம்பிக்கை ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய அரசியல் சமநிலையைத் தேடும் ஒரு காலகட்டத்தில் அது உள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் இந்த தேடல் பிரிட்டனின் அரசியல் முகத்தை அடிப்படையாக மாற்றக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கதிரியக்க சிகிச்சைகளில் பின்னடைவு; நெருக்கடியில் 1000 புற்றுநோயாளிகள்!

கொழும்பு, ஜூன். 28

அரச சுகாதாரத் துறையில் கதிரியக்கச் சிகிச்சை சேவைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் காரணமாக சுமார் 1,000 புற்றுநோய் நோயாளிகள் அத்தியாவசிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதாக சுகாதாரத் தொழில் வல்லுநர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதாரத் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்,

கதிரியக்கச் சிகிச்சைத் திட்டமிடலுக்குப் பயன்படுத்தப்படும் பழைய "சிரி சிமுலேஷன்" இயந்திரம் கடந்த ஏப்ரல் 29 அன்று செயலிழந்த நிலையில் மே 21ஆம் திகதியளவில் புதிய "சிரி சிமுலேஷன்" இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்ட போதிலும், அந்த இயந்திரம் நிறுவப்பட்ட கட்டடத்தின் கூரையிலிருந்து நீர் கசிந்ததன் காரணமாக அது பயன்படுத்தப்படாமல் உள்ளது.

ஜூன் முதலாம் திகதியளவில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டபோதிலும், இந்த இயந்திரம் இன்னும் நோயாளிகளின் சிகிச்சைக்காகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை. கதிரியக்கச் சிகிச்சைக்கு முந்தைய மிக முக்கியமான ஒரு செயல்முறையே "சிரி சிமுலேஷன்" ஆகும்.

இது மருத்துவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பகுதியை துல்லியமாகக் கண்டறியவும், கதிரியக்கக் கதிர்களின் திசைகளைத் தீர்மானிக்கவும், சிகிச்சைக்கான கோணங்களைத் திட்டமிடவும், கதிரியக்க அளவைக் கணக்கிடவும் மற்றும் ஆரோக்கியமான திசுக்களுக்குத் தேவையற்ற பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்கவும் உதவுகிறது.

"சிரி சிமுலேஷன்" செயல்முறை இல்லாமல் கதிரியக்கச் சிகிச்சையைத் தொடங்குவது நடைமுறையில் சாத்தியமற்றது என்பதால், புற்றுநோய் சிகிச்சையின் முக்கியமான கட்டத்தில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

அவசர சந்தர்ப்பங்களுக்காக தற்போது "பி.ஈ.ரி-சி.ரி." இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்பட்டாலும், அது "சிரி சிமுலேஷன்" நோக்கத்திற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்படாததால், பதிலீடான அதற்கு தீர்வாகாது.

இந்தத் தாமதம் காரணமாக ஏற்கனவே கீமோதெரபி, அறுவை சிகிச்சை மற்றும் இதர சிகிச்சைகளை முடித்த நோயாளிகள் காத்திருப்புப் பட்டியல்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

கதிரியக்கச் சிகிச்சை தள்ளிப்போடப்படுவதால், அவர்களுக்கு மீண்டும் புற்றுநோய் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது.

மகரகம, கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட குறிப்பிட்ட சில மத்திய நிலையங்களில் மாத்திரமே கதிரியக்கச் சிகிச்சை வசதிகள் உள்ளன. எனவே ஒரு மத்திய நிலையத்தில் ஏற்படும் தாமதம் நாடு முழுவதிலும் உள்ள நோயாளிகளைப் பாதிக்கும் -என்றார்.

(அ)

# இளைஞர் வேலையின்மை நாட்டில் கணிசமாக குறைவு

கொழும்பு, ஜூன். 28

சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் மூலமாகவும், தனியார் துறையுடனான கூட்டுப் பங்களிப்பின் மூலமாகவும் அரசாங்கம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதால், இலங்கையில் இளைஞர் வேலையின்மை விகிதம் கடந்த ஒரு வருடத்தில் கணிசமாகக் குறைந்துள்ளதாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் தினிந்து சமன் ஹேன்னாயக்க தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டியவில் உள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி நடைபெற்ற 'இளைஞர் உத்வேக விளையாட்டு விழா 2026' இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவில் முதன்மை அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் இளைஞர்களுக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான இலக்காகும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:-

இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தடுத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக முறையான தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்துடன், ஒழுக்கநெறி மற்றும் மனித விழுமியங்களை வளர்க்கும் நோக்கில் விளையாட்டு மற்றும் கலைத்துறை சார்ந்த நடவடிக்கைகள் நாடு தழுவிய ரீதியில் ஊக்குவிக்கப்படும்.

மேலும், இலங்கை இளைஞர்களின் திறமைகளை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்காக அரசாங்கத்தினால் இரண்டு புதிய திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன-என்றார்.

(அ)

## பல அரச...

2027ஆம் ஆண்டுக்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள நிதி உத்திப் பிரகடனத்தில், குறித்த நிறுவனங்களில் தொடர்ந்து ஏற்படும் நட்டங்கள், பலவீனமான பணப்புழக்கம் மற்றும் அதிக கடன் சுமை ஆகியவையே இதற்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 12 அரச நிறுவனங்களின் நிதி ஆபத்துகளை பகுப்பாய்வு செய்து, அந்த அறிக்கையில் இந்த விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

விலை திருத்தங்கள் மற்றும் செயல்பாட்டு மாற்றங்களுக்குப் பிறகு, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக அதிகார சபை ஆகியன ஒப்பீட்டளவில் வலுவான நிதி நிலையை வெளிப்படுத்திய போதிலும், அவையும் இன்னமும் குறைந்த ஆபத்து மட்டத்திலேயே நீடிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களின் நிதி குறிகாட்டிகள் ஓரளவு மேம்பட்டதற்குக் காரணம், அவற்றின் திரட்டப்பட்ட நட்டங்கள் மற்றும் பிணை வழங்கப்பட்ட கடன்களை திறைசேரி பொறுப்பேற்றதே ஆகும் எனவும் இதில் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், இது ஆபத்தை முழுமையாக நீக்குவது அல்ல என்றும், ஆபத்தை மற்றொரு தரப்பிற்கு மாற்றுவது மட்டுமே என்றும் இந்த நிதி ஆபத்துகள் குறித்த பிரகடனம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## சுரேஷ் சாலேயுக்கு...

நோய் சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## அரசாங்கத்தை...

ஆரம்பமாகியது.

இதில் மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் புதிய அரசாங்கமும் அதன் மீன்பிடி அமைச்சரும் மீனவர்களின் பிரச்னைகளுக்கு எந்தவித தீர்வுகளையும் முன்வைக்காத நிலையில் தேசிய ரீதியில் மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த பொதுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வட மாகாணத்துக்கு உட்பட்ட மீனவப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் கேமன் குமார பிரதம விருந்தினராக கலந்துகொண்டதுடன் அதன் மாவட்ட இணைப்பாளர்களும் பங்கேற்றனர்.

கூட்டத்தின் இறுதியில் கடற்றொழில் நீரியல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் கலந்து கொண்டு மீனவ பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். (அ)

## அரசியலமைப்பு யோசனைகள்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு அணிகளுமே இனப்பிரச்சினைக்கான நிலைபேறான இறுதித் தீர்வு மீளப்பெறமுடியாத அதிகாரப் பகிர்வுடன் கூடிய கூட்டாட்சி (சமஷ்டி ) கட்டமைப்பே என்ற நிலைப்பாட்டைக் கொண்டவை யாகும்.

மாகாணசபைகள் முறையையும் அரசியலமைப்புக் கான 13 வது திருத்தத்தையும் எவ்வாறு கையாளுவது என்பதில் இரு அணிக்கும் இடையில் கடுமையான முரண்பாடு இருக்கிறது. ஒரு அணி இறுதித் தீர்வை நோக்கிய பயணத்தில் மாகாண சபைகள் முறையை ஒரு படியா கப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் 13 வது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வைக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்ற அதேவேளை, மற்றைய அணி மாகாண சபைகளை ஒரு ஆரம்பப் புள்ளியாகவேனும் கருத முடியாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கி றது.

ஒரு அணி திம்பு பிரகடனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான தேசியம், தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றில் ஊன்றிய கட்டமைப்பை முன்வைக்கின்ற நிலையில், மற்றைய அணி இந்த கட்டமைப்பை கோட்பாட்டு ரீதியாக ஆதரிக்கின்ற அதேவேளை நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையாக, பெரும்பான்மை இனத்தவர்களின் அச்சத்தைத் தூண்டாத வகையில் சொற்பதங்களில் விட்டுக்கொடுப்பைச் செய்து சுயாட்சிப் பண்புகளைக் கொண்ட ஏற்பாடொன்றை அடைவதில் அக்கறை கொண்டிருக்கிறது. ஒற்றையாட்சியை இரு அணிகளுமே நிராகரிக்கின்ற அதேவேளை, இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் ஒற்றையாட்சியை இல்லாமல் செய்யப் போவதில்லை என்ற யதார்த்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டியவையா கவும் இருக்கின்றன.

இரு அணிகளும் முன்னெடுக்கின்ற முயற்சிகள் போரின் முடிவுக்குப் பின்னரான இன்றைய காலப்பகுதியில் சிதைவடைந்திருக்கும் தமிழ் அரசியல் சமுதாயத்தின் இடர் மிகு நிலையைப் பிரதிபலிக்கின்றன. உள்ளக மற்றும் வெளிப்புற சுயநிர்ணய உரிமை அல்லது ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி போன்ற சொற்பதங்களின் நுணுக் சட்ட வேறுபாடுகள் குறித்து தமிழ் அரசியல் சமுதாயம் விவாதித்து தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டிருக் கும் வேளையில், பெரும்பான்மை இனத்தவரின் பொதுவான எண்ணம் 13 வது திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்த எதிர்ப்புக் காட்டுவதாகவே இருந்து வருகிறது.

இரு தமிழ் அரசியல் அணிகளுக்கும் இடையே ஒரு குறைந்தபட்ச கூட்டு இணக்கப்பாடு இல்லாதபட்சத்தில் தனித்தனியான அரசியலமைப்பு யோசனை வரைவுகளை அரசாங்கம் தமிழர்கள் மத்தியில் மேலும் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருங்கிணைப்பற்றதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான கோரிக்கையாகக் காட்டுவதற்கும் வழிவகுத்துவிடும்.

இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. இரு அணிகளுமே ஒன்றிணைந்த வரைவு ஒன்றைத் தயாரிப்பதற்கு முயற்சிக்க முடியும். இல்லாவிட்டால், தங்களது திருப்திக்கு அவர்கள் தனித்தனியான வரைவுகளைத் தயாரித்து தங்களுடனேயே வைத்திருக்க வேண்டியிருக்கும்.

## ஈரான் மீது அமெரிக்கா மீண்டும்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ட்ரம்பிடம் டிரோன் தாக்குதல் மற்றும் போர்நிறுத்தம் தொடர்பான கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

அதற்குப் பதிலளித்த ட்ரம்ப், "நீங்கள் பார்ப்பீர்கள். அவர்கள் தாக்குதல் நடத்தியது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அதைச் செய்யக்கூடாது." என்றார்.

சமீப நாட்களாக, ஈரான் உடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் இருப்பதாக ட்ரம்ப் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறி வருகின்றனர். ஹோர்மூஸ் நீரிணையைக் கடந்து வரும் கப்பல்களுக்கு கட்டணம் விதிக்கும் பரிந்துரையை ஈரான் கைவிட்டதாகவும் கூறி வருகின்றனர்.

டிரம்ப் முன்னதாக வெளியிட்ட ட்ரூத் சோசியல் பதிவில், சுங்கக் கட்டணம், காப்பீட்டு கட்டணம் அல்லது வேறு எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படாது என அமெரிக்காவிடம் ஈரான் கூறியதாக டிரம்ப் தெரிவித்திருந்தார்.

இது தவறான தகவல் என்றால் பேச்சுவார்த்தைகள் உடனடியாக முடிவுக்கு வரும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு ஈரான் கட்டணம் விதிப்பதாக வரும் செய்திகளுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. இத்தகைய கட்டணம் வசூலிக்கும் முறை சர்வதேச கடல்சார் சட்டங்களுக்கு எதிரானது எனப் பல்வேறு தரப்பினரும் கூறி வருகின்றனர்.

கப்பல் போக்குவரத்தின் எதிர்கால மேலாண்மை தொடர்பாக ஈரான் மற்றும் ஓமன் அதிகாரிகள் கடந்த செவ்வாய்கிழமை ஓமன் தலைநகர் மஸ்கட்டில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். கட்டணம் இல்லாத பாதுகாப்பான பயணத்திற்கு இருநாடுகளும் உறுதி கொண்டிருப்பதாக ஓமன் வெளியுறவு அமைச்சர் பதர் அல்-புசாய்தி தெரிவித்திருந்தார்.

ஆனால் ஈரான் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவரான முகமது பாகர் காலிபாஃப் அந்நாட்டின் அரசு ஊடகங்களிடம் பேசுகையில், "ஹோர்மூஸ் நீரிணையின் நிர்வாகம் என்பது போருக்கு முன்பு இருந்த நிலைக்குச் செல்லாது என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்." என்று கூறியிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை சிங்கப்பூர் கொடி ஏந்திய எவர் லவ்லி என்கிற கப்பல் தாக்குதலுக்கு உள்ளானது.

பிரிட்டிஷ் கடற்சார் பாதுகாப்பு முகமையின்படி, ஓமனின் தாஹித் துறைமுகத்திற்கு தென் கிழக்குப் பகுதியில் 7.5 கடல் மைல்கள் தொலைவில் இந்தக் கப்பல் தாக்குதலுக்கு உள்ளானது.

ஹோர்மூஸ் நீரிணையில் எவர் லவ்லி கப்பல் தாக்கப்பட்டபோது, பிரிட்டிஷ் கடற்சார் பாதுகாப்பு முகமை பரிந்துரைத்த வழித்தடத்தில் தான் அந்தக் கப்பல் பயணித்து வந்ததாக அதன் உரிமையாளர் எவர்கிரீன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில் போர் தொடங்கியதில் இருந்து ஹோர்மூஸ் நீரிணையில் சிக்கித் தவிக்கும் 11,000க்கும் மேற்பட்ட மாலுமிகளை மீட்கும் திட்டத்தை ஐநாவின் சர்வதேச கடற்சார் அமைப்பு (ஐஎம்ஓ) நிறுத்திவைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வடக்கு வைத்திய...

தலைமை தாங்கிய இக்கூட்டத்தில், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண சபை மொத்தம் 117 மருத்துவ மனைகளை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. ஏனைய மாகாணங்களில் மத்திய அமைச்சால் நிர்வகிக்கப்படும் மாவட்டப் பொது மருத்துவமனைகளை, வடக்கில் மாகாண சபையே நிர்வகிப்பதால் நிதிச் சுமை ஏற்படுகிறது. எனவே, மத்திய அமைச்சு ஏனைய மாவட்டப் பொது மருத்துவமனைகளுக்குச் செலவிடும் அதே அளவிலான நிதியை வடக்கு மாகாண சபைக்கும் வழங்க வேண்டும். அத்துடன், பராமரிப்பு மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் போதாமையைக் கருத்தில் கொண்டு, மத்திய அமைச்சின் ஊடாகப் பல வருட மூலதன முதலீட்டுத் திட்டமொன்றை உருவாக்க வேண்டும்.

கிளிநொச்சி விசேட பெண்கள் மருத்துவமனைக்கெனப் புதிதாக அனுமதிக்கப்பட்ட 58 ஆளணிகளில், மத்திய அமைச்சின் கீழுள்ள 45 வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணப் பிரிப்பின் பின்னர் வடக்கில் 1,500 க்கும் மேற்பட்ட பணியிடங்கள் இழக்கப்பட்டுள்ளன. 55 பிரதேச மருத்துவமனைகளில் 34 மருத்துவ மனைகள் தாதியர் இன்றி இயங்குகின்றன. 11 ஆண்டுகளாக முடக்கப்பட்டிருக்கும் அடிப்படை நிலை ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் மற்றும் மருந்தாளுநர்களாக மாற்றப்பட வேண்டியஃநிரப்பப்பட வேண்டிய பகிர்ந்தளிப்பாளர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனைகளில் நிலவும் விசேட மருத்துவ நிபுணர் வெற்றிடங்களுக்குத் தற்காலிக இணைப்புகளுக்குப் பதிலாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். தாதியர்கள் கட்டாய சேவையின் பின்னர் வடக்கிலிருந்து வெளியேறுவதைத் தடுக்க, அவர்களுக்கான குறைந்தபட்ச சேவைக் காலத்தை நீட்டிக்க வேண்டும்.

வவுனியா மருத்துவமனையின் பழுதடைந்த சி.ரி.ஸ்கானரை மாற்றுவதுடன், மன்னார் மருத்துவமனைக்குப் புதிய சி.ரி. ஸ்கானர் வழங்கப்பட வேண்டும். தெல்லிப்பழை கதிரியக்கத் தொகுதி மற்றும் செட்டிகுளம் சிறுநீரக நோய் மத்திய நிலையம் போன்ற இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்டங்களை நிறைவு செய்ய உடனடி நிதி தேவை. அத்துடன், பழுதடைந்துள்ள நோயாளர் காவு வண்டிகள் மாற்றப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை "தேசிய மருத்துவமனையாக" மாற்றுவதை உறுதியான இலக்காகக் கொண்டு அதன் உட்கட்டமைப்பு மற்றும் ஆளணியை மேம்படுத்த வேண்டும். தெல்லிப்பழையை மாவட்டப் பொது மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். மேலும் சங்கானை, சிலாவத்துறை, கோப்பாய் மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைகளின் தரமுயர்த்தல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இணைந்து சிறப்பான முறையில் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையை மேற்கொண்டு வருகின்றன. மத்திய சுகாதார அமைச்சு இதற்கென ஒதுக்கும் நிதியை மாகாண சபைக்கு வழங்கினால், வேலைத்திட்டத்தை மேலும் வினைத்திறனாக முன்னெடுக்க முடியும்-என்றார் ஆளுநர்.

ஆளுநரின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த சுகாதார அமைச்சர், ஒவ்வொரு விடயத்துக்கும் சாதகமான பதில்களை வழங்கினார்.

வடக்கு மாகாணத்தின் தனித்துவமான நிர்வாகச் சுமையைக் கருத்தில் கொண்டு, நிதி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவும், பராமரிப்புத் தேவைகளுக்கான நிதியை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கான சி.ரி. ஸ்கானர் கொள்வனவுக்கான நடைமுறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து வவுனியா மருத்துவமனைக்கும் சி.ரி. ஸ்கானர் கொள்வனவு செய்து வழங்கப்படும்.

மருத்துவமனைகளைத் தரமுயர்த்துவதற்கு முன்னதாக, அவற்றின் தற்போதைய தரத்திற்குரிய ஆளணி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை முழுமையாக ஏற்படுத்திக் கொடுப்பதே பொருத்தமானது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை தொடர்பில் சுகாதார அமைச்சில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுத் தனியாக ஆராயப்படும்.

தாதியர் வெற்றிடங்களை இயலுமானவரை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும், தாதியர் கற்கை நெறிக்குத் தமிழ் மாணவர்கள் விண்ணப்பிப்பது குறைவாக உள்ளதால், இது குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வையும் ஊக்குவிப்பையும் ஏற்படுத்த வேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் மன்னார் மருத்துவமனையில் முன்னெடுக்கப்படும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்படும். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் மதிப்பீட்டுத் தயாரிப்புப் பணிகளை விரைவுபடுத்துமாறும் அமைச்சர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், நாடு தழுவிய ரீதியுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் குறைவாகக் காணப்படுகின்றமை குறித்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியதுடன், அதற்காக வடக்கில் பின்பற்றப்படும் வினைத்திறனான நடைமுறைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் முற்றிலும் இலவசமான செயற்கை முறை கருக்கட்டல் சேவை வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் இதன்போது ஆளுநரால் விசேடமாக தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீபவானந்தராசா, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி), மாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். (அ)

## சித்திரவதைகளுக்கு...

மக்கள் அமைப்பு, சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை பிரசாரம் மற்றும் மூலோபாய தர்க்கித்தல் செயற்திட்டம் ஆகிய 9 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கை இந்தப் பிரகடனத்தை 1994ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. இருப்பினும் அதற்கு முன்பதாக 1979 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசு தனிநபர்களை பலவந்தமாகக் கைதுசெய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும், வலிந்து காணாமலாக்குவதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் ஊடாக தமிழ் மக்கள் பெருமளவுக்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டு மோதல் இடம்பெற்ற காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழர்கள் மிகமோசமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் பாலியல் வன்முறைகளுக்கும், வலிந்து காணாமலாக்கப்படல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு உண்மையில் என்ன நேர்ந்தது என்பதை தொடர்ந்து ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் மறைத்து வருவதன் காரணமாக, அவர்களது குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மைகளை இன்னமும் அறியாமல் இருக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைகளின் பிரகாரம், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழ் மக்களுக்கு அவசியமான உணவு, மருத்துவப் பொருட்கள் மற்றும் ஏனைய மனிதாபிமான உதவிகள் கிடைக்கப்பெறுவதை இலங்கை அரசாங்கம் வேண்டுமென்றே தடுத்தது என நம்பகரமான ஆதாரங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் சித்திரவதைகள் அல்லது ஏனைய மிகமோசமான மீறல்களுக்குச் சமனானவையாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டு சித்திரவதைகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் உபகுழுவிடம் சமர்ப்பித்த அறிக்கையில், "நபரொருவர் கைதுசெய்யப்படுவதற்கான காரணமாக சந்தேகிக்கப்படும் குற்றத்தின் தன்மையைப் பொருட்படுத்தாமல், நாட்டின் சகல பாகங்களிலும் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகமானது கடந்த 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குறிப்பாக வடக்கில் தமிழர்களுக்கு எதிராகப் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் ஏனைய மோசமான நடத்துகைகள் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் பதிவுசெய்துள்ளது.

அதுமாத்திரமன்றி ஆணையாளர் அலுவலகத்தினால் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சித்திரவதைகள் தொடர்பில் தீவிர கரிசனை வெளியிடப்பட்டிருந்துடன், இவ்வாறான நடவடிக்கைகள் பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்களுக்கும் காரணமாக அமைந்திருக்கக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இவற்றுக்கு மேலாக இலங்கையில் ஆட்சிபீடமேறிய ஒவ்வொரு அரசாங்கத்தின் கீழும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு ஆழமாக வேரூன்றியுள்ளது. உதாரணமாக தற்போதைய அரசாங்கம் கடந்த ஆண்டு மே மாதம், இறுதிக்கட்டப் போரின்போது சகல சந்தர்ப்பங்களிலும் பொதுமக்கள் இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டதாகப் பொய்யான கருத்தொன்றை வெளிப்படுத்தியது. இந்த தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கானது தடுப்புக்காவலின் கீழான சித்திரவதைச் சம்பவங்கள் தீவிரமடைவதற்கு வழிகோலுகிறது.

இக்குற்றங்களைப் பொறுத்தமட்டில் உள்ளக நீதிப்பொறிமுறையில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில், சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றே பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரே தெரிவாக இருக்கிறது. இலங்கை ரோம் சாசனத்தில் கையெழுத்திடாத காரணத்தினால், இலங்கையுடன் தொடர்புடைய விவகாரங்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பெல்லை வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் சித்திரவதைகள் மற்றும் ஏனைய மிகமோசமான, மனிதத்தன்மையற்ற, பாரதூரமான தண்டனைகளுக்கு எதிரான பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள், அப்பிரகடனத்தின் வரைமுறைகளை மீறியமைக்காக இலங்கைக்கு எதிராக அந்தப் பிரகடனத்தின் 30 ஆவது உறுப்புரையைப் பிரயோகிக்குமாறு வலியுறுத்துகிறோம் என அக்கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## தெல்லிப்பழை வைத்திய...

தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் ச. சிறிபவனந்தராசா , வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி, தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், வைத்தியர்கள், தாதியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## சுரேஷ் சாலே...

தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கம் பரந்த மக்களின் ஆதரவைப் பெற்ற அரசாங்கமாகும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும், அதற்கு ஒரே வார்த்தையில் சான்றிதழ் வழங்க முடியாது.

நாட்டில் புதிய அரசியல் சக்தியொன்று உருவாகும் என தாம் நம்பவில்லை. தற்போதுள்ள அரசியல் சக்தியே தொடர்ந்தும் வெளிப்படும். நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் அரசியல் எதிர்பார்ப்புகளுடன் செயற்பட்டு வருகின்ற போதிலும், அவர்களது அரசியல் பயணத்தில் பின்னடைவுகள் ஏற்படலாம்.

நாட்டில் சட்டம் பொதுவாக நல்ல முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. சில சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட வகையில் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் இருந்தாலும், குற்றவாளிகள், ஊழல்வாதிகள் மற்றும் நாட்டை கொள்ளையடித்தவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கம் எவ்வித தயக்கமும் காட்டவில்லை.

சுரேஷ் சாலே தொடர்பான விவகாரத்தை தற்போது சில தரப்பினர் அரசியல் பிரச்னையாக மாற்றி அரசியல் சர்ச்சையாக முன்னெடுத்து வருகின்றனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் தற்போது உயிரிழந்துள்ள போதிலும், அதனுடன் தொடர்புடைய அமைப்புகளின் எஞ்சிய உறுப்பினர்கள் அல்லது ஆதரவளித்தவர்கள் யாரேனும் இருந்தால், அவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சுரேஷ் சாலே மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் அவருக்கே பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். அவர் உடலளவில் பலவீனமடைந்தால், தமக்கான வழக்கை முன்னெடுத்துச் செல்ல தேவையான ஆற்றலை இழக்க நேரிடும்-என்றார். (அ)

## யாழ். போதனா...

இதய நோய்களைக் கண்டறியவும், அறுவை சிகிச்சை இல்லாமல் குணப்படு த்தவும் பயன்படும் ஒரு அதிநவீன மருத்து வப் பரிசோதனைக் கூடமான "கத் லாப்" யாழ். போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டதன் ஊடாக வடமாகாண மக்களுக்கான மிக பெரிய வரப்பிரசாதமாக இது அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான , ச.சிறிபவனந்தராசா, க.இளங்குமரன் , ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலைப் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் தற்போதைய தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், மருத்துவ உபகரணங்கள், மனிதவளத் தேவைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இதன்போது விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. (அ)

## சாலேயின் நிலை...

நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுரேஷ் சாலேயை பார்வையிட்ட பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுரேஷ் சாலேயுக்கு இன்று (நேற்று) காலை திடீரென கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டது.

உடனடியாக அவரை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு சென்றார்கள். அங்கு மருத்துவர்கள் பல்வேறு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அந்த பரிசோதனைகளின் பின்னர், அவருக்கு ஒரு குறிப்பிட்ட உடல்நலக் குறைபாடு இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதனால் தற்போது அவர், அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மீண்டும் மீண்டும் நெஞ்சுவலி ஏற்படக் கூடிய அபாயம் இருப்பதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

அதற்காக, தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. அமைச்சர்கள் அல்லது வெளியில் இருப்பவர்கள் என்ன கூறினாலும்,

இங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களே, உண்மையான நிலையை அறிந்திருக்கிறார்கள். சுரேஷ் சாலே தற்போது நல்ல நிலையில் இல்லை. நாளுக்கு நாள் பல்வேறு உடல்நலச் சிக்கல்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# விஜேதாசவின் மகன் விடயத்தில் அரசியல் தலையீடுகள் இல்லை!

**பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர**



கொழும்பு, ஜூன். 28

முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் மகன் உள்ளிட்டோரின் கைது விவகாரத்தில் அரசாங்கம் எவ்வித அரசியல் தலையீடுகளையும் மேற்கொள்ளவில்லை. சட்டமும் பாதுகாப்பு துறையும் தங்களது கடமைகளை சுதந்திரமாக செய்து வருகின்றன. எதிர்க்கட்சியினர் எவரேனும் இதில் தொடர்புபட்டிருந்தால், அவர்கள் நீதிமன்றத்தின் முன் தோன்றி தங்களின் நிரபராதித் தன்மையை நிரூபிக்க வேண்டும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் மகன் உள்ளிட்டவர்களின் கைது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பாராளுமன்றத்தில் அரசாங்கமாகிய எமது பிரதான பணி அரசியல் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதாகும். எனவே, இந்த விவகாரங்கள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களமும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சும், பொலிஸ் மா அதிபரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் அரசாங்கம் தலையிடுவதில்லை மாறாக, அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான வழிகாட்டல்களையும், அதற்குத் தேவையான சேவைகளையும் வசதிகளையும் மட்டுமே செய்து கொடுக்கிறது.

எனவே, பொது எதிர்க்கட்சியில் யாராவது இந்த விவகாரங்களுடன் தொடர்புபட்டிருந்தால், அவர்கள் நீதிமன்றத்திற்கு முன்னால் வந்து தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பதுதான் அவர்களின் பொறுப்பாகும். அரசாங்கமாகிய நாம் சட்ட ரீதியான நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். இது குறித்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்திலும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஒரு அரசாங்கமாக எங்களின் கடமை, மக்களின் பாதுகாப்பையும் அவர்களின் நலனையும் உறுதி செய்வதாகும். பொது மக்கள் இந்த அரசாங்கத்தை எங்களிடம் ஒப்படைத்திருப்பது அவர்களுக்காகப் பணியாற்றுவதற்காகத்தான் ஏனெனில் இதுவொரு மக்கள் அரசாங்கமாகும். மேலும், பொது எதிர்க்கட்சியின் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது இப்போது அனைவருக்கும் மிகத் தெளிவாகத் தெரிந்த ஒன்றேயாகும் - என்றார்.

(அ)

# எமது கட்சி மீது எதிரணி அவதூறு!

**சட்ட நடவடிக்கை என ஜே.வி.பி. எச்சரிக்கை**

கொழும்பு, ஜூன். 28

ஐக்கிய மக்கள் சக்தியால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் எமது கட்சி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. பொய் கூறி எமது கட்சி மீது அவதூறு பரப்புவதற்கு மேற்கொள்ளும் முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தத் தவறான குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: -

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா அமைப்பாளர் வருண ராஜபக்ஷ அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பில், இலஞ்சக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சரித் அபேசிங்க என்பவருக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தொலைபேசி மூலம் அழைத்து, ஜனாதிபதியைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று முற்றிலும் பொய்யானதாகும்.

பாதாள உலகக் குழுக்களுடனான தொடர்புகள் மற்றும் இலஞ்ச ஊழல் விவகாரங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ள இந்தச் சூழ்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி எந்தளவுக்கு பதற்றமடைந்துள்ளது மற்றும் அரசியல் ரீதியாக வங்குரோத்தடைந்துள்ள என்பதையே இந்த அபாண்டமான குற்றச்சாட்டு காட்டுகிறது. அத்துடன், இவ்வாறான அப்பட்டமான பொய்களைக் கூற வைக்குமளவுக்கு அக்கட்சி கீழ்த்தரமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது வருந்தத்தக்கதாகும்.

ஏனைய கட்சிகளுக்கு தங்களின் வெவ்வேறு அரசியல் தேவைகளுக்காக, நபர்களின் பின்னணியை ஆராயாமல் தங்களோடு இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை இருக்கலாம். ஆனால், குற்றவாளிகளை எமது கட்சியிலோ அல்லது அரசாங்கத்திலோ இணைத்துக் கொள்ள வேண்டிய எந்தவொரு தேவையும் ஜே.வி.பிக்கு கிடையாது. இவ்வாறான தவறான பிரசாரங்கள் மூலம், குற்றச் செயல்களுக்குக் கிடைக்க வேண்டிய சமூகத்தின் அவதானத்தை திசைதிருப்பவும், குற்றவாளிகளைக் காப்பாற்றவும் சிலர் மேற்கொள்ளும் முயற்சிகள் வீணானவையாகும்.

எனவே, பொய் கூறி எமது கட்சி மீது அவதூறு பரப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சிலர் மேற்கொள்ளும் இந்த முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தத் தவறான குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதையும் ஜே.வி.பி உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறது - என்றுள்ளது.

(அ)

# புதிய கல்வி மறுசீரமைப்புக்கு அமைச்சு தயார்நிலையில்!

**ஜனாதிபதி செயலாளர் தலைமையில் ஆய்வு**

கொழும்பு, ஜூன். 28

கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவின் தலைமையில், கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ உட்பட கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

அடுத்த ஆண்டு முதல் 06 ஆம் தரத்திற்குரிய புதிய கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு முழுமையான தயார் நிலையில் உள்ளதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய கல்வி மறுசீரமைப்புகள் ஐந்து தூண்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இது தொடர்பாக ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, அந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழுக்களின் செயல்பாடுகளைக் கண்டறிவதற்கும் அவற்றின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும் கல்வி அமைச்சரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்புகள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர்.

இந்த மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தல் குறித்து நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு, 06 ஆம் தரத்திற்குரிய பாடத்தொகுதிகளை உரிய திருத்தங்களுடன் அச்சிடும் பணிகள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், 06 ஆம் தரத்தின் முதலாம் தவணைக்குரிய அனைத்துப் பாடத் தொகுதிகளும் தற்போது அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாம் தவணைக்குரிய பாடத்தொகுதிகளுடன் சேர்த்து அவற்றை ஒரே நேரத்தில் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

கல்வி மறுசீரமைப்புகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக, தேசிய கல்வி நிறுவகமும், தேசிய கல்வி ஆணைக் குழுவும் தொடர்ச்சியாகத் தலையீடு செய்யும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், இந்தப் பாடத்தொகுதிகளை மேம்படுத்தும் பணிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் என்றும் கலந்துரையாடப்பட்டது.

கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அனைத்துப் பாடசாலைகளுக்கும், அதாவது 6,500 இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு தேவையான உபகரணங்கள் தற்போது வழங்கி முடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக, அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 373 பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றை அபிவிருத்தி செய்யும் பணிகளும் தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 28

நாட்டில் நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், பொசன் விடுமுறை காலத்தில் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பிற நீர்நிலைகளுக்கு அருகில் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொசன் பண்டிகையை முன்னிட்டு உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வூட்லர் கூறுகையில்-

நீர் சார்ந்த விபத்துகள் தற்போது அதிகரித்துள்ளன. விடுமுறைக் காலத்தில் பொதுமக்களுக்கு உதவுவதற்காக நாடு முழுவதும் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நீர் சார்ந்த விபத்துகளைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறோம். 2026ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 75 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த பண்டிகைக் காலத்தில் நீர் வினோத இடங்களுக்குச் செல்லும் போது பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றவேண்டும். நாடு முழுவதும் 48 பொலிஸ் பிரிவுகளில் 31 பிரிவுகளில் உயிர் காக்கும் குழுக்கள் இயங்கி வருகின்றன.

அபாய்கரமான இடங்களில் வைக்கப்பட்டுள்ள எச்சரிக்கை பலகைகளுக்குக் கீழ்ந்து செயற்படவேண்டும் என்றும் தேவைப்படும்போதெல்லாம் உயிர் காப்பவர்களின் உதவியை எவரும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றோம்.

மதுபானம் அல்லது போதைப் பொருள் உட்கொண்ட பிறகு யாரும் நீர்நிலைகளில் இறங்கக் கூடாது. பல நீர் வினோத இடங்களில் சாதாரண உடையில் அதிகாரிகள் நிறுத்தப்பட்டுள்ளனர். சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், விடுமுறைக் காலத்தில் நீச்சல் குளங்கள் மற்றும் பிற நீர் வினோதப் பகுதிகளில் குழந்தைகளை பெற்றோர் உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டும்.

இதற்கிடையில், பொசன் பண்டிகையின்போது பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் உட்பட நாடு முழுவதும் 10,000 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அதிகப்படியான ஒலியை எழுப்பும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் அல்லது ஓட்டோக்களைப் பயன்படுத்தும் வாகன ஓட்டிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மோட்டார் சைக்கிள்கள் அல்லது ஓட்டோக்கள் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் கடுமையான, இடையூறு விளைவிக்கும் அல்லது பயத்தைத் தூண்டும் ஒலி விளைவுகளைப் பயன்படுத்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

அதிகப்படியான சத்தத்தை உருவாக்குவதற்காக மாற்றியமைக்கப்பட்ட சைலன்சர்கள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அதிக சத்தம் எழுப்பும் ஒலி அமைப்புகளைப் பயன்படுத்தும் வாகனங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர் மற்றும் பின்னால் பயணிப்பவர் இருவருமே பாதுகாப்பு தலைக்கவசம் அணியவேண்டும்.

தலைக்கவசம் அணியாவிட்டால் ஓட்டுநர் மற்றும் பயணி என இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்படும். மோட்டார் சைக்கிள்களில் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டதை விட அதிக பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடாது. அத்துடன் பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டுவது பொறுத்துக்கொள்ளப்படமாட்டாது.-என்றார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 28.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media